Working Paper 45
November 2001
Tamil Version
January 2003

**Benedikt Korf**

# Livelihoods at Risk

**Land Use and Coping Strategies of War-affected communities in the Trincomalee District**

INTEGRATED FOOD SECURITY PROGRAMMME
TRINCOMALEE

42 Huskison Street
31000 Trincomalee
Sri Lanka

phone 026-22023
22687
fax 026-22296
e-mail ifspsl@sri.lanka.net
internet www.ifsp-srilanka.org

# முகவுரை

IFSP-CATAD செயற்திட்டம் - 2001, ஜேர்மனி நாட்டிலுள்ள பேர்ளின் ஹும்போல்ட் (Humboldt University of Berlin) பல்கலைக்கழகத்தின் விவசாய, கிராமிய அபிவிருத்திக்கான உயர் பயிற்சி நிலையத்தினதும் இலங்கையிலுள்ள திருகோணமலை ஒருங்கிணைக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு செயற்திட்டத்தினதும் (IFSP), ஒரு கூட்டு முயற்சியாகும். இந்த ஆய்வு, ஜேர்மன் சமஷ்டி பொருளாதார, கூட்டுறவு, அபிவிருத்தி (BMZ) அமைச்சினுடைய நிதியுதவியைக் கொண்டு IFSP யினால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வு இலங்கை-ஜேர்மன் குழுவைச் சேர்ந்த பல்துறை நிபுணத்துவமுடைய இளம் ஆராய்ச்சியாளர்களினாலும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களினாலும் நடத்தப்படுகிறது.

IFSP-CATAD செயற்திட்டம் 2001 திருகோணமலை மாவட்டத்தில் வாழும் மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் கையாளும் சமூக-பொருளாதார பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் உபாயங்களைப் பற்றியும் காணியைப் பயன்படுத்தும் வழமையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றியும் ஆராய்கிறது. இந்த ஆய்வு ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களத்தால் (DFID) உருவாக்கப்பட்ட “ஜீவனோபாய முறைமை அணுகுமுறையைப்” பின்பற்றுகிறது.

IFSP-CATAD செயற்திட்டம் 2001 இனது ஆரம்ப பெறுபேறுகள் IFSP செயலாற்று ஆவணங்கள் 37-45 இல் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அறிவு உற்பத்தியாதலின் நானாவித படிகளும் அடுத்து வரும் ஆய்வுக் கட்டங்களும் மற்றும் ஆய்வுப் பெறுபேறுகளும் மேலதிக கலந்துரையாடலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.


**ஆய்வுக் குழுவினர்**

| *CATAD Team:* | *IFSP Team:* |
|---|---|
| Benedikt Korf (Team Leader) | Rohini Singarayer (Team Leader) |
| Tobias Flämig | K. Devarajah |
| Christine Schenk | Dharmarajah Dharshinie |
| Julia Ziegler | Abeyratne Ratnayake |
| Monika Ziebell | T. Sakthivel |

Further information can be obtained from:
Integrated Food Security Programme Trincomalee (IFSP)
42 Huskison Street
31000 Trincomalee
Sri Lanka
phone.: ++94 (0)26-22023, 22687
fax: ++94 (0)26-22296
e-mail: ifspsl@sri.lanka.net
internet: www.ifsp-srilanka.org

# அறிமுகம்:[1]

<u>ஆய்வின் பின்னணி</u>

இலங்கை நாட்டின் வட-கிழக்கு அபிவிருத்திக்கு மாபெரும் இடைஞ்சலாக இருப்பது அங்கு நடைபெறும் மோதலாகும். யுத்தமானது அங்கு வாழும் மக்களுக்கு ஒரு வழமையான நிகழ்வாகவும் அதுவே உண்மை நிலையாகவும் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் அது மக்களை விரக்தியடையச் செய்து நம்பிக்கை இழக்கச் செய்கிறது. இந்த மாதிரியான சூழ்நிலையில் மக்களால் எவ்வாறு வாழ்க்கை நடாத்த இயல்கிறது? நீடித்துக் கொண்டிருக்கும் இந்த யுத்த நிலைமைகளை மக்கள் எவ்வாறு எதிர்கொண்டு தமது வாழ்க்கையை கொண்டு நடத்துகிறார்கள் என்பதைப் பற்றிய ஒரு முழுமையான அறிவை புனர்வாழ்வில் ஈடுபட்டிருக்கும் நானாவித அமைப்புகளும் ஆளணியினரும் பெற்றிருப்பது மிக அவசியமாகும். இக்கருத்தினை நோக்கமாகக் கொண்டு, திருகோணமலை மாவட்டத்தில் வாழும் மோதலினால் பாதிப்புற்ற சமூகங்கள் இத்தகைய சூழலை முகம் கொடுத்து வாழ்வதற்கு கையாளும் சமூக-பொருளாதார ஈடுகொடு நுட்பங்களை, குறிப்பாக காணியை பயன்படுத்தும் முறையையும் உணவு போஷாக்குப் பாதுகாப்பு என்பவற்றை ஆராய்வதற்காக IFSP-CATAD செயற்திட்டம் 2001 இனை திருகோணமலை IFSP ஏற்படுத்தியது.

இந்த செயலாற்று ஆவணங்கள், IFSP-CATAD செயற்திட்டம் 2001 இனுடைய ஆய்வு பெறுபேறுகளை அறிவிக்கின்றன. இதனுடைய கண்டுபிடிப்புகள் திருகோணமலை, பேராதனை, கொழும்பு ஆகிய இடங்களில் 2001ஆம் ஆண்டு புரட்டாதி மாதத்திலும் ஜேர்மனி நாட்டு பேளின் ஹம்போல்ட் பல்கலைக்கழகத்தில் 2001 கார்த்திகை மாதத்திலும் ஒரு பங்காளர் அடிப்படையிலான செய்முறையாக சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. இந்த உரையாடலிலும், பகிரங்க விளக்கங்களிலும், IFSP ஊழியர்கள், பங்காளி நிறுவன ஊழியர்கள் ஆகியவர்களுடனான பயிற்சிப்பட்டறைகள் மற்றும் இலங்கையிலும் ஜேர்மனியிலுமிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட கல்விமான்கள், தொழில் நடத்துநர்கள் ஆகியோர்களுடனான விவாத வட்டங்கள் ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த சம்பாஷணை பல விடயங்களை நோக்கமாகக் கொண்டது:

(i) ஆய்வு பெறுபேறுகளை நடைமுறைப்படுத்துவது.

(ii) ஆய்வு கண்டுபிடிப்புகளுக்கும் ஏனைய கண்டுபிடிப்புகளுக்குமிடையே ஒத்திசைவு

(iii) பகுத்தாய்வதற்கும் திட்டமிடுவதற்கும் ஏற்ற ஒரு உத்தியாக ஜீவனோபாய முறை எண்ணக் கருவின் பொருத்தம்.

இலங்கையில் மோதலினால் பாதிப்புற்ற பகுதிகளைப் பற்றிய நுண்மட்ட தகவல்களை பரப்புவதையும் அதே நேரத்தில் இந்த வளநிலையங்கள் தாம் பெற்றுக் கொண்ட அறிவை, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் IFSP-CATAD செயற்திட்டம் 2001 செயற்பாடுகளினுடைய ஆய்வு வடிவத்திற்கு மீண்டும் அளித்து ஆய்வுக்குப் பயனாக இருப்பதையும் நோக்கமாகக் கொண்ட இந்தப் பங்காளர் சம்பாஷணை IFSP யினதும் CATAD இனதும் செயற்பாடுகளில் ஒரு முக்கிய பகுதியாகும்.

இந்த ஆவணம் பின்வருமாறு தொடர்கிறது: இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தினுடைய பூர்வீகத்தினுடைய சுருக்கமான வர்ணனையில் ஆரம்பித்து இந்த ஆய்வினுடைய குறிக்கோள்களைப் பற்றியும் பகுத்தாய்தல் கட்டமைப்பைப் பற்றியும் விளக்கமளிக்கிறது: உணவு, போஷாக்கு பாதுகாப்பு (FNS) என்னும் எண்ணக்கரு மற்றும் ஜீவனோபாய முறை அணுகுமுறை (LSA). இந்த ஆவணம் ஆய்வு நடைபெற்ற இடங்களைப் பற்றிய ஒரு சுருக்கமான வர்ணனையை அளித்து ஜீவனோபாய முறையைப் பின்பற்றி ஒரு விடய ஆய்வை (Casestudy) விரிவாக எடுத்துக் கூறுகிறது. மேலும் இந்த ஆவணம் ஈடுகொடு உபாயங்களைப் பற்றிய ஒரு முத்தூண் மாதிரியை அளித்து திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஆய்விற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து இடங்களிலிருந்து உதாரணங்களை எடுத்துக் கூறுகிறது. குறிப்பான சில அமைப்புகள் யுத்த சூழலுக்கு எவ்வாறு ஈடுகொடுக்கின்றன என்பதைப் பற்றியும் நாம் ஆராய்கிறோம். இவ்வாறான சூழ்நிலைகளில் பிறரின் தலையீடுகள் எவ்வாறு நிலைத்து இருக்கக்கூடிய ஜீவனோபாய உபாயங்களை ஏற்படுத்த ஆதரவளிக்கிறது என்பதனையும் அபிவிருத்தி நிறுவனங்களும் செயற்திட்டங்களும்

---

1 பெறுமதியான விமர்சனங்களும் ஆலோசனைகளும் றோகினி சிங்கராயரிடமிருந்து நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

தமது குறிக்கோள்களையும் கொள்கைகளையும் எவற்றின்மீது செலுத்தவேண்டும் என்பது பற்றியும் இறுதியாக கலந்துரையாடுவோம்.

<u>ஆய்வு நடத்தப்பட்ட சூழ்நிலை:</u>
இலங்கையில் நடைபெற்று வரும் உள்நாட்டு மோதல் ஒரு சிக்கலான (அரசியல்) அவசர கால நிலைமை என வர்ணிக்கலாம். இந்த மோதல் தற்போது நிலவும் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார கட்டமைப்புகளின் பிரதிபலிப்பாக விளங்குவதோடு இவற்றிலே அது புதைந்துமுள்ளது (Goodhand and Hulme 1999). இது சமூகத்தின் ஒவ்வொரு பரிமாணத்தையும், இலங்கையில் மோதல் நடைபெறும் வலயங்களில் வசிக்கும் (பிரதானமாக வடக்கு கிழக்கு) மக்களுடைய உயிர்களையும் சம்பந்தப்படுத்துகிறது. குறிப்பிட்ட ஒரு சமூக அமைப்பின் மேல் கொண்டுள்ள விசுவாச உணர்வால் வடிவம் பெற்ற இந்த உள்நாட்டு மோதல் அதே நாட்டில் வசிக்கும் மற்றைய இனங்களுக்கு எதிரான அதீத வெறுப்பு ஆகியவற்றால் உந்தப்பட்டு இனதேசிய வடிவம் என்ற இயல்பை பெற்றுள்ளது

இலங்கையில் மோதல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வட-கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டம் அமைந்துள்ளது. இந்த மாவட்டம் மூவினங்களும் சிங்களவர், முஸ்லிம்கள், தமிழர் ஆகியோர் கலந்து வாழும் ஒரு பகுதியாகும். இப்பகுதியில் நடைபெறும் இந்த மோதல் மோதலில் ஈடுபட்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள், இலங்கைப் பாதுகாப்புப் படையினர் ஆகியோர் இடையே அதீத பகைமையை உருவாக்கி இந்த மாவட்டத்தில் வாழும் இனங்களிடையே மோதலை உருவாக்கி உள்ளது (O'Sullivan 1997). மோதல்கள் கிழக்கு மாகாணத்தில் இந்த இரு குழுக்களுக்கிடையே நடைபெறுவது மாத்திரமின்றி அங்கு வாழும் வேறுபட்ட இனங்களுக்கிடையேயும் இடையிடையே மோதல்கள் ஏற்பட்ட வண்ணம் உள்ளன. 1990 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இப்பகுதிகளில் தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையே நடைபெற்ற மோதல்களை விஷேடமாகக் குறிப்பிட முடியும். உள்நாட்டு யுத்தமானது வட-கிழக்கிலே உள்ள ஏனைய மாவட்டங்களிலே 1990 ஆம் ஆண்டிலிருந்து மோசமான நிலைமையை எட்டியிருந்தாலும் திருகோணமலை மாவட்டத்தில் வாழும் தமிழ், சிங்கள இனங்களுக்கிடையே 1990 இற்கு முன்பே இடைக்கிடை நடைபெற்ற மோதல்கள் அநேகம். பாதுகாப்பின்மை, பயிர்ச்செய்கையில் ஈடுபட அச்சம் ஆகியன காரணமாக விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டு உற்பத்தி கணிசமான அளவு வீழ்ச்சியடைந்ததுள்ளது: பாதுகாப்பு நிலைமை காரணமாக அநேகமான வயல்நிலங்களை மக்கள் சென்றடைய முடியாதுள்ளது. சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளமையினால் பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குக் கொண்டு செல்வது பாதிக்கப்பட்டுள்ளது.

18 வருடகாலமாக நடைபெற்று வரும் மோதல் உள்நாட்டு யுத்தம் ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்ட மந்தபோஷாக்கும் வறுமை நிலையும் அச்சமூட்டும் நிலையை எட்டியுள்ளன (REINHARD & KRAMER 1999). வீடுகள், கிராம உட்கட்டமைப்புகள் உற்பத்தி மூலங்கள் ஆகியன நிர்மூலமாக்க ப்பட்டுள்ளன. கல்வி, சுகாதார சேவைகள் போன்ற அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை. மிகக்கடுமையான முறையில் தடை செய்யப்பட்டுள்ள உள்ளூர் பொருளாதாரம் தனிநபர் ஒருவரை சந்தர்ப்பங்களை நோக்கிச் செல்வதை தடுக்கிறது. மீன்பிடிப்பு, சிறு அளவிலான கமத்தொழில் மற்றும் கூலித்தொழில் ஆகியனவற்றில் தங்கியுள்ள குடும்பங்களே குறிப்பாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பெண்கள் தலைமையாளராகவுள்ள குடும்பங்கள் பாதிப்புறக்கூடிய நிலைமைகள் மிக அதிகமாகவுள்ளன.



அகதிமுகாம்களிலிருந்து அண்மையில் தமது கிராமங்களிற்குத் திரும்பிய குடும்பங்களில் அநேகமானவை போதுமான ஜீவனோபாய மார்க்கங்களின்றி உள்ளன. தற்போது நிலவும் ஸ்திரமற்ற பாதுகாப்பு நிலைமை ஒரு நீண்டகால அபிவிருத்திக்கான ஒத்துழைப்பைப் பெறுவதற்கு ஒரு பாரிய தடையாக உள்ளது.

## பகுத்தாய்தலின் கட்டமைப்பு: சிக்கலான அவசர நிலைகளில் ஜீவனோபாய மார்க்கங்கள்

<u>உணவு, போஷாக்கு பாதுகாப்பு என்னும் எண்ணக்கரு:</u>
உணவுப்பாதுகாப்பு என்பது பெரும்பாலும் உணவு உற்பத்தி சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனையாக குறைத்து எடை போடப்படுகிறது. உள்ளூரிலே உணவு போதுமான அளவு கிடைக்கக்கூடியதாக இருந்தாலும் மக்கள் பட்டினியால் தவிப்புற முடியும் என Amarthya Sen வாதிட்டார் (Sen, 1981). மந்த போஷாக்கு, பட்டினி என்பன உணவு கிடைத்தலில் உள்ள பிரச்சனையிலும் பாக்க ஒரு கொள்வனவுச் சக்தி சார்ந்த பிரச்சனையாகவோ அல்லது உணவு பெற்றுக் கொள்ள இருக்கும் உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சனையாகவோ கூடுதலாக உள்ளது. O'Sullivan, Sen. இனது சந்தை உரித்துடமை எண்ணக்கருவிற்கு ஒருபடி மேலே சென்று 'சந்தை சார்பற்ற உரித்துடைமை' அதாவது அரசாங்கம் வழங்கும் பொது உரித்துடைமைகள் (கல்விச் சேவைகள், சுகாதாரமும் நிவாரணமும்) மற்றும் குடிசார் உரித்துடைமைகள் (அரச சாரபற்ற நிறுவனங்களால் மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள்). 'உரித்துடைமை' என்பவற்றையும் உள்ளடக்குகிறார். அணுகுமுறைக்கும் ஒருபடி மேலாக செல்லும் உணவு-போஷாக்கு பாதுகாப்பு (FNS) உணவுப் பாவனையில் தரம் அளவு என்பன எவ்விதம் இடம் பெறுகிறது என்னும் விடயங்களை உள்ளடக்கி குடும்பத்திற்குள்ளே உணவு விநியோகம் பற்றியும் கவனம் செலுத்துகிறது (Reinhard and Wijayaratne 2000).

அடுத்த கட்டமாக ஜேர்மன் நாட்டு பொருளாதார கூட்டுறவு, அபிவிருத்தி சமஷ்டி அமைச்சு உணவுப் பாதுகாப்பின் மூன்று பரிமாணங்களை இனங் காணுகிறது:

(i) **கிடைத்தல்** எந்த வேளைகளிலும் உணவு கிடைக்கக்கூடியதாக இருத்தல் (உள்ளூர் சந்தைகளில் கிடைக்கக்கூடிய அளவிற்கு போதுமான அளவு உணவு உற்பத்தி செய்யப்படுகிறதா? அல்லது போதுமான அளவு இறக்குமதி செய்யப்படுகிறதா?
(ii) **பெறல்** எந்த நேரங்களிலும் உணவைப் பெற்றுக் கொள்ளல். (உணவை விலை கொடுத்துப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான கொள்வனவு சக்தி அல்லது வேறு உரித்துடைமைகள் குடும்பங்களுக்கு உள்ளதா?)
(iii) **பயனும் பாவனையும்** பாவனைப்படுத்தும் உணவு சரியான நிறையுணவு தரத்தில் இருத்தல் (உட்கொள்ளப்படும் உணவு போஷாக்குள்ளதாக இருக்கிறதா? அந்த உணவை அகத்துறிஞ்சுவதற்கு ஏற்ற ஆரோக்கிய நிலையில் மக்கள் உள்ளனரா?)




1998 ஆம் ஆண்டிலிருந்து திருகோணமலை ஒருங்கிணைக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு செயற்திட்டம் (IFSP) உணவு போஷாக்குப் பாதுகாப்பினுடைய சகல மூன்று அம்சங்களிலும் தனது ஆதரவை வழங்குகிறது, அதாவது: உட்கட்டமைப்பினுடைய புனர்நிர்மாணம், விவசாயத்திற்கு உதவி வழங்கும் சேவைகளை வளப்படுத்தல் மற்றும் சுகாதாரம், போஷாக்கு பற்றிய துறைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம். உணவு போஷாக்குப் பாதுகாப்பின் இரண்டு பிரதான பகுதிகளில் IFSP-CATAD செயற்திட்டம் 2001 தனது கவனத்தை செலுத்தியுள்ளது: (i) மக்களால் எவ்வாறு தமது உணவுத் தேவைகளையும் வருமானத் தேவைகளையும் பெற்றுக் கொள்ள முடிகிறது (ஈடுகொடு உபாயங்கள்) (ii) மோதல் எவ்வாறு காணிப்பாவனை உரிமை சம்பந்தமாக காணிப் பாவனை முறைமைகளையும் பின்னர் அதன் விளைவாக, பிரதேசங்களில் உணவு கிடைப்பதையும், குடும்பங்கள் உணவைப் பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றையும் தீர்மானிக்கும் காரணியான காணி வள பாவனையையும் பாதிக்கிறது?

இரண்டு முக்கிய ஆய்வு விடயங்களில் IFSP மற்றும் பங்காளர் நிறுவனங்களுடைய புரிந்துணர்வை மேம்படுத்துவதை IFSP-CATAD செயற்திட்டம் 2001 நோக்கமாகக் கொண்டுள்ளது.

1. மோதல் நிலைமைகளையும் அதனுடன் தொடர்புபட்ட இடர்நிலை என்பவற்றிற்கு மக்கள் எவ்வாறு ஈடுகொடுக்கிறார்கள்?

2. மோதலின் காரணமாக எழுந்துள்ள காணிப்பாவனை முறைமைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு மக்களும் நிறுவனங்களும் எவ்வாறு ஈடுகொடுக்கின்றனர்?

ஆய்வு விடயமாகிய சமூக-பொருளாதார ஈடுகொடு உபாயங்கள், உணவைப்பெறல், உணவின் பயனும் பாவனையும் ஆகியவற்றினுடைய பரிமாணங்களுக்கிடையிலான இடைநிலையில் பிரதானமாக கவனம் செலுத்துகிறது: மோதலின் காரணமாக எழுந்துள்ள ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையில் மக்கள் தமது உணவுத் தேவைகளை எவ்வாறு பெறக்கூடியதாக உள்ளது? உணவை எவ்வாறு பயன்படுத்த முடிகிறது?
விவசாய முறைமைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் உணவு கிடைத்தல் பரிமாணத்திலும் கவனம் செலுத்தும். இந்நேரத்தில் உணவு கிடைத்தலின் ஒரு குறிப்பிடக்கூடிய முக்கிய பகுதியாக காணிப்பாவனை விளங்குகிறது: எந்த வகையான விவசாய முறைகள் பொதுவாக நடைமுறையில் உள்ளன? அவைகள் எவ்விதத்தில் மக்களுக்கு வருமானத்தை (உணவினைப் பெறும் மார்க்கங்கள்) அல்லது ஜீவனத்தைப் (உணவு கிடைத்தல் அல்லது உணவைப் பெறும் மார்க்கம்) பெற்றுக் கொடுக்கின்றன?
காணி வளங்களில் நீண்டகால முதலீட்டிற்கு மக்கள் தயாராக இருக்கிறார்களா இல்லையா என்பதைத் தீமானிக்கும் காணிப்பாவனை உரிமைகள் மற்றும் இலாபகரமாக காணி வளங்களைப் பயன்படுத்தல் ஆகிய விடயங்களை காணிப்பாவனை உள்ளடக்குகிறது.

<u>ஜீவனோபாய முறை அணுகுமுறை (LSA):</u>
ஜீவனோபாய முறைமை அணுகுமுறை (LSA) என்பது அபிவிருத்தியின் குறிக்கோள்கள், வாய்ப்பு, முன்னுரிமைகள் என்பவற்றைப்பற்றி கருத்தில் கொள்ளும் ஒரு வழிமுறையாகும். இந்த அணுகுமுறை பிரித்தானிய “சாவதேச அபிவிருத்திக்கான திணைக்களத்தால்” (DFID)2 ஊக்குவிக்கப்படுகிறது. குடும்பங்களில் உணவு போஷாக்குப் பாதுகாப்பு என்பவற்றினை நிர்ணயிக்கும் ஜீவனோபாய உத்திகளைப் பற்றிய மேலதிக அறிவைப் பெற்றுக்கொள்ள இது உபயோகமாக இருக்க முடியும்.




ஜீவனோபாயமுறைமை அணுகுமுறையில் ஒரு முக்கிய பலமாக விளங்குவது யாதெனில் மக்களினுடைய பிரச்சனைகள், தேவைகள், கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காது மக்களினுடைய ஆற்றல்கள், திறமைகள் என்பவற்றை இணைத்து அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதாகும். ஜீவனோபாயங்களும், ஜீவனோபாயங்கள் உருவாக தூண்டி அவைகளை வடிவமைக்கும் நிறுவனங்களும் தொடர்ச்சியாக மாற்றமடைபவை என்பதை அது உணர்ந்துள்ளது. நுண்மட்டத்தில் நாம் அவதானிப்பவற்றிற்கிடையில் உள்ள தொடர்புகளையும் நுண்மட்ட நிலைமைகளில் எவ்வாறு பெருமட்ட கொள்கைகள் தாக்கம் விளைவிக்கின்றன என்பதனையும் அது ஆராய்கிறது. ஒரு “ஜீவனோபாய நோக்கமுடைய” அபிவிருத்தி அணுகுமுறையானது கட்டுப்பாடுகளை அகற்றுவதன் மூலம் மக்களுடைய ஆற்றல்களையும் திறமைகளையும் பயன்படுத்தி மக்களுடைய சக்திகளைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டிருக்கும். இது திருகோணமலை ஒருங்கிணைக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு செயற் திட்டத்தின் (IFSP) தற்போதைய நோக்கங்களை மிக சார்ந்ததாக உள்ளது.

அரசியல் நிலைமை காரணமாக ஏற்படும் சிக்கலான அவசரநிலைகளின் போது, அதாவது, நீடித்துக் கொண்டிருக்கும் சமூக, இன வடிவம் கொடுக்கப்பட்ட உள்நாட்டு யுத்தங்களுக்கும் மோதல்களும், மக்களினதும் சமூகங்களினதும் வாழ்க்கை நடத்தை முறைகளை

---

[2] விபரமான கலந்துரையாடலுக்கு Scoones 1998; Carney 1998; Chambers & Conway 1992 ஆவணத்தைப் பார்க்கவும்.

அவதானிப்பதற்கும் அவற்றைப் புரிந்து கொள்வதற்கும் ஜீவனோபாய முறைமை அணுகுமுறை ஒரு குறிப்பிடத்தக்க பயனுள்ள ஒரு பகுத்தாய்வு உத்தியாகும். அது சமூகங்களை எளிதில் பாதிப்புறக்கூடிய நிர்க்கதியான குழுக்களாகக் கருதுவதில்லை.
எதிர்மாறாக இது தற்போது நிலவுகின்ற சூழ்நிலைகளில் (இலகுவில் பாதிப்புறும் சூழல்) அவர்களது ஈடுகொடு உபாயங்களை ஆராய்கிறது. அம்மக்களுடைய வாழ்க்கையை நிர்ணயிக்கும் காரணிகளான இயற்கை, சமூக பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார அடிமான நிபந்தனைகளை பாதிப்புறக் கூடிய சூழல் கொண்டுள்ளது. மறுபக்கத்தே இந்தக் காரணிகளை ஒரு தனி கிராம வாசியாலோ ஒரு தனி சமூகத்தினாலோ மாற்றியமைப்பது மிகவும் இயலாத காரியமாகும். எவ்வாறாயினும் பாதிப்புறக்கூடிய சூழல் நிலைத்து நிற்கக்கூடிய ஒன்று என்பதை இது குறிப்பதில்லை. இது மாற்றமடையக் கூடியதும் காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டிருப்பதுமாகும்.

இத்தகைய சவால் நிறைந்ததும் கடினமானதுமான கட்டுமான நிபந்தனைகளை கருத்திற் கொண்டு ஜீவனோபாய முறைமை அணுகுமுறை, குடும்பங்களுடைய வளங்களை (5 முதன்மை ஆஸ்திகள், பௌதீக இயற்கை, மனித நிதி மற்றும் சமூக ஆஸ்திகள்) ஆராய்ந்து எவ்வாறு மக்கள் தமது ஆஸ்திகளை ஒன்று திரட்டி (ஈடுகொடு உபாயங்கள்) குறிப்பிட்ட பெறுபேறுகளை (பலன்கள்) அடைவதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறது. பாதிப்புறக்கூடிய சூழல் தவிர மாற்றமடைந்து வரும் கட்டமைப்புகளும் நடைமுறைகளும் மக்களின் வாழ்க்கை முறையில் ஆதிக்கம் செலுத்தி அவர்கள் ஒரு குறிப்பிட்ட முறையில் வாழத் தூண்டும். ஜீவனோபாய சூழலில் எவ்வகையான கட்டமைப்புகள் (நிறுவனங்கள், அமைப்புகள், விதிமுறைகள், கொள்கைகள்) உள்ளன?
இந்தக் கட்டமைப்புகள் எவ்வாறு செயற்படுகின்றன (நடைமுறைகள்)? இவ்வாறாக நடைமுறைகள் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் நடைமுறை ஏற்பாடுகளைக் குறிக்கின்றன. (விளையாட்டின் விதிமுறைகள், (எதிர்)[3] ஊக்குவிப்புகள் சிக்கலான அரசியல் அவசரநிலைகளில் சட்டவிதிமுறைகள், கொள்கைகள் ஆகியவற்றிற்கும் அவைகளை அமுல்படுத்துவதில் பொறுப்பாயுள்ள கட்டமைப்புகளுடைய உண்மையான நடவடிக்கைகளுக்கும் இடையே ஒரு பாரிய இடைவெளியை நாம் அடிக்கடி காணக்கூடியதாகவுள்ளது. ஆகவே IFSP-CATAD செயற்திட்டம் 2001 உத்தியோக பூர்வமான நிறுவனங்கள் (கட்டமைப்புகள், அமைப்புகள், சட்டங்கள், கொள்கைகள்) எனப்படுபவற்றிற்கும் இவைகள் எவ்வாறு உண்மையிலேயே பின்பற்றப்படுகின்றன அல்லது சம்பிரதாயமற்ற ஏற்பாடுகள் (நடைமுறைகள்) மூலம் இவைகள் எவ்வாறு விலக்கி செல்லப்படுகின்றன என்பவற்றை மேலும் வேறுபடுத்துகின்றன. மாற்றமடைந்துவரும் கட்டமைப்புகளும் நடைமுறைகளும் எவருக்கு எவ்வகையான ஆஸ்திகள் கிடைக்கின்றன என்பதை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கினை வகிப்பதோடு சில குறிப்பிட்ட ஆஸ்திகளின் உண்மையான பெறுமதியையும் அறிவிக்கினறன. ஒரு முதன்மை ஆஸ்தி மற்றைய ஆஸ்திகளாக மாற்றப்படகூடிய எல்லைகளின் மீது சந்தைகளும் சட்டரீதியான தடைகளும் ஒரு ஆழ்ந்த ஆதிக்கத்தைக் கொண்டுள்ளன.

[3] அரச படிமங்களிலிருந்து தனியார் துறையின் சகல வடிவங்கள் வரை கட்டமைப்புக்களை அமைப்புக்களாகவும், செயன் முறைகளை கொள்கைகள், சட்டங்கள், விளையாட்டின் விதிகள் மற்றும் ஊக்கங்களாகவும் வேறுபடுத்தும் DFID வரைவிலக்கணத்திலிருந்து இந்த இடத்தில் நாம் சிறிது விலகிச் செல்கிறோம்.

### பெட்டி1: ஐந்து முதன்மை ஆஸ்திகள்:

**இயற்கை முதல்:**
ஜீவனோபாயத்திற்கு இன்றியமையாத இயற்கை வளங்களை அளிக்கின்ற இயற்கை வள இருப்பு (உ+ம் காணி, நீர், வனஜீவராசிகள், இயற்கை சூழலில் வாழும் நானாவித உயிரினங்கள், சுற்றாடல் வளங்கள்)

**மனித முதல்:**
நானாவித ஜீவனோபாய உபாயங்களை தொடர்வதற்கு முக்கியமான மனிதனுடைய ஆற்றல்கள், அறிவு, வேலை செய்வதற்கு இயலுமாயிருத்தல் மற்றும் தேக ஆரோக்கியம்.

**பௌதீக முதல்:**
மக்கள் தமது ஜீவனோபாயங்களை மேற்கொள்வதற்கு உறுதுணையாக இருக்கும் அடிப்படை உட்கட்டமைப்புகள் (போக்குவரத்து, புகலிடம், நீர், சக்தி, தொடர்பு சாதனங்கள்) மற்றும் உற்பத்தி சாதனங்களும் உற்பத்தி செய்யக்கூடிய வழிவகைகளும்.

**நிதி முதல்கள்:**
மக்களுக்குக் கிடைக்கக்கூடியதும் அவர்களுக்கு நானாவிதமான ஜீவனோபாய தெரிவுகளை வழங்குபவையுமான நிதி வளங்கள் (சேமிப்பு, கடன் வசதிகளை அளித்தல், வெளியிடங்களிலிருந்து பெறப்படும் சீரான பணம், ஓய்வு காலக் கொடுப்பனவு).

**சமூக முதல் (அரசியல் முதலுடன்):**
ஜீவனோபாயங்களைத் தேடுவதில் ஈடுபட்டுள்ள மக்கள் சமூக முதல்களில் (வலைப்பின்னல்கள், குழுக்களிலே அங்கத்துவம் பெற்றிருத்தல், உறவு அல்லது நம்பிக்கை) இருந்து இவற்றை ஏற்படுத்திக் கொள்வர். சமூக முதலின் ஒரு உப-பிரிவாக அரசியல் முதல் சமூகத்தின் பரந்துபட்ட நிறுவனங்களின் அனுசரணையை, குறிப்பாக உள்ளூர் அல்லது பிரதேச மட்டங்களில் அதிகாரத்தை வைத்திருப்பவர்களுடைய (குடிசார், முறைசார்ந்த, முறைசாரா ஆயுததாரி) கூட்டைப் பெற்றுக் கொள்வதைக் குறிக்கிறது.

(Adapted from Scoones 1998, further developed by IFSP-CATAD 2001)

<u>பாதிப்புறக் கூடிய நிலையும் இடரும்:</u>
சிக்கலான அரசியல் அவசர நிலைமைகளின் போது ஜீவனோபாய முறைகளில் குறிப்பாக ஆபத்திலுள்ளது எது? ஜீவனோபாய முறைகளின் மீது யுத்தத்தினுடைய ஆழமான தாக்கம், இடர், நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றை அதிகரித்துள்ளது. இடைக்கிடை கிளம்பும் பலாத்காரங்களாலும் ஆயுதப்படையினரதும் வன்முறை கும்பல்களினதும் ஆதிக்கங்களினாலும் உருவம் பெற்ற பாதிப்புறு சூழலில் விவசாயம் அல்லது மீன்பிடி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஜீவனோபாய செயற்பாடுகளை தொடர்வது ஒரு உயிராபத்தான காரியமாகும். வயல் நிலங்களில் அரைவாசி காடுகளை அண்மித்த பாதுகாப்பற்ற பகுதிகளில் (இவ்வாறாக LTTE கட்டுப்பாட்டின் கீழ்) இருக்கின்ற அதே நேரம் கடற்புலிகளின் செயற்பாடுகளின் காரணமாக பாதுகாப்புப் படையினர் மீன்பிடித்தலுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். மேலும் திடீரென வெடிக்கும் மோதல், வன்முறை போன்றவற்றால் மக்கள் வீடுகளை விட்டு காடுகளிற்கோ அல்லது இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கோ ஓடித்தப்பி இடம் பெயர்ந்துள்ளனர்.

உள்நாட்டு மோதல் போன்ற உறுதிப்பாடு இல்லாத நிலைமை சிக்கலான அரசியல் அவசர நிலையினுடைய ஒரு பிரதான தோற்றமாக இருப்பது போல் தோன்றுகிறது. பாதிப்புறும்தன்மை எண்ணக்கருவின்படி சிக்கலான அரசியல் அவசர நிலைமையிலுள்ள குடும்பங்கள் மூன்றுவகையான ஜீவனோபாய இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். (Chambers 1989, Bohle 1993):

(i) *நெருக்கடிகள், மனஅழுத்தம், அதிர்ச்சிகள் ஆகியவற்றை எதிர்கொள்ளல்:* சிக்கலான அரசியல் அவசர நிலைமையில் அரசியல் சம்பந்தப்பட்ட அதிர்ச்சிகள் மிகவும் வெளிப்படையான தோற்றமாக இருக்கும் அதேவேளை ஒரு நீண்டகால

வீழ்ச்சிப்போக்கு ஆரம்பமாயுள்ளதை நாம் அவதானிக்க்கூடியதாக உள்ளது (உட்கட்டமைப்புகளின் சிதைவடைந்துள்ள நிலை, விவசாய உற்பத்தியில் வீழ்ச்சி).

(ii) *ஈடுகொடு உபாயங்கள் போதாமை:* வன்முறை, மோதல் (அரசியல் அதிர்ச்சிகள்) ஆகியவற்றால் ஏற்படும் கடுமையான விளைவுகளுக்கு மக்கள் முகம் கொடுப்பதற்கு இயலுமான சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு. இதிலிருந்து மீள்வதற்கோ, தப்புவதற்கோ இருப்பதாகத் தெரியும் பிரதான மார்க்கம் மோதல் நடக்கும் இடத்தைவிட்டு அகன்று செல்லக்கூடியவசதியுள்ளவர்கள் அகன்று விடுவதேயாகும் (இடம்பெயர்வு, குடியகலல்)

(iii) *மிகக் கடுமையான பின்விளைவுகள்:* சிக்கலான அரசியல் அவசர நிலையில் குடும்பங்களுக்கு ஏற்படும் அதிர்ச்சிகள், நெருக்கடிகள் ஆகியன மக்கள் மீண்டும் ஒரு இயல்பு நிலைக்குத் திரும்பி அவர்கள் தமது உற்பத்தி வலு அல்லது மீள் உற்பத்தி செய்யும் வலு சீர்கெடுவதை தடுக்க முடியாதவாறு கடுமையாகப் பாதிக்கின்றன. ஒரு தாழ்ந்த, அவலமான (உள ரீதியாக, சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக) வாழ்க்கைநிலை இயல்பாகிறது.

இவ்வாறான இடர்நிறைந்த நிச்சயமற்ற கால கட்டங்களில் மக்கள் நிலைத்திருக்கக் கூடிய முறையில் இயற்கை வளங்களை நிர்வாகம் செய்வதில் கவனம் செலுத்துவதிலும் பார்க்க தாம் குறுங்காலத்திற்கு பிழைத்திருப்பதற்கு எது அவசியம் என்பதிலேயே கவனம் செலுத்தக் கூடும். ஆகவே நானாவித ஜீவனோபாயங்களின் மூலம் கிடைக்கப்பெறும் பெறுபேறுகளுடைய பின்னூட்டல்களை (சாதகமான தாக்கம், பாதகமான தாக்கம்) முதன்மை வளங்களின் மீது மதிப்பீடு செய்வது அவசியமாகிறது. நீடித்த காலப்பகுதியில் இப்பின்னூட்டல்களை கட்டமைப்புகளுடனும் நடைமுறைகளுடனும் கணிப்பீடு செய்வது அவசியமாகிறது. ஈடுகொடுத்தல் உபாயங்களினால் உண்டாகக்கூடிய சுற்றாடல் மாற்றங்களையும் ஜீவனோபாய முறையின் பலாபலன்களையும் வள முகாமைத்துவம் அழுத்திக்கூறும் அதேவேளை சமூக, பொருளாதார, அரசியல் பின்னூட்டல்களை குடும்ப முதல் ஆஸ்திகளிற்கு (சாதகமானதும் பாதகமானதும்) மதிப்பீடு செய்வதும் அதேயளவிற்கு அவசியமாகிறது. சிக்கலான அரசியல் அவசர நிலைமையில் மோதலினுடைய தாக்கத்தை மதிப்பீடு செய்வது சில குறிப்பான ஈடுகொடு உபாயங்களும் அவற்றினுடைய பெறுபேறுகளும் இனங்களுக்கிடையிலுள்ள மனக்கசப்பு மோசமடைந்து அதன் மூலம் மோதல்கள் உருவாவதற்கு எவ்விதம் பங்களிப்பு செய்யக்கூடும் என்பதை விபரிப்பதற்குப் பயன்படும். அதேவேளை பெறுபேறுகள் பண்பான சமுதாயத்தைக் கட்டியெழுப்பி சமாதானத்தை ஏற்படுத்த உள்நாட்டு ஆற்றல்களை வலுப்படுத்தும்.

# ஆய்வு முறைமை

<u>முறைகளும் முறைமையும்</u>
பேர்ளின் ஹம்போல்ட் பல்கலைக்கழகத்திலுள்ள விவசாய, கிராம அபிவிருத்தி உயர் பயிற்சி மத்திய நிலையத்தால் (CATAD) உருவாக்கப்பட்ட செயல், முடிவெடுத்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஆராய்ச்சி (ASDR) எண்ணக்கருவை ஆராய்ச்சிக்குழு பின்பற்றியது. (முன்கொணர்வு. Nagel & Fiege 2001). தொழில் புரிபவர்கள் திட்டமிடுவதற்கும், அவற்றை அமுல்படுத்துவதற்கும், வேலைகளை மதிப்பீடு செய்வதற்கும் வசதியளிக்கும் முகமாக அவர்களுக்கு கருமமாற்றக் கூடிய, அதாவது, செயற்திறன் மைய, தகவல்களை வழங்குவதை ADR நோக்கமாகக் கொண்டுள்ளது: இந்த எண்ணக் கருவானது துரித கிராம மதிப்பீட்டுத் தத்துவங்களோடு நெருக்கமாகத் தொடர்புபடுத்தப்பட்டு உண்மைநிலை காண், மீளாய்வு ஆராய்ச்சி அணுகுமுறைகள் ஆகியவைகளை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் IFSP-CATAD செயற்திட்டம் சம்பந்தப்பட்டவர்களுடனான சம்பாஷணையிலும் (வெளிவாரி வளநிலையங்களுடனான தொடர்பு) IFSP மற்றும் பங்காளி ஊழியர்களின் (உள்வாரி கல்வியறிவு) ஆற்றலைக் கட்டியெழுப்புவதையும் முக்கியமாகக் கருதுகிறது. கலாச்சாரங்களுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் பல்துறை நிபுணத்துவத்தை ஒன்றுபடுத்தவும் பல்வேறு விடய நெறிகளை பின்னணியாகக் கொண்ட இலங்கை, ஜேர்மனி நாடுகளைச் சோந்த இளம் ஆராய்ச்சியாளர்களையும், தொழில்புரிபவர்களையும் இந்த ஆராய்ச்சிக்குழு ஒன்று திரட்டியுள்ளது.

முறைசாரா “கிராம உலாவின் போது” மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போதும், சமூகங்களில் இருக்கும் நானாவித குழுக்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் போதும் பயன்படுத்தப்பட்ட ஆய்வு முறைகள் பிரதானமாக தரம் சம்பந்தப்பட்டதாகும். குடும்பங்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்களே மக்கள் மேற்கொண்டுவரும் சமூக – பொருளாதார ஈடுகொடு உபாயங்களை ஆராய்வதற்கு உதவிய பிரதான மார்க்கங்களாகும். குழுநிலை கலந்துரையாடல்களின் போது, RRA உத்திகளை பயன்படுத்தக்கூடிய பொருத்தமான இடங்களிளெல்லாம் அவை பயன்படுத்தப்பட்டன. குழுநிலை கலந்துரையாடல்களின் போது கிடைக்கப் பெற்ற தகவல்களை, “பிரதான தகவலாளிகளுடன்” (informant) நடைபெற்ற கலந்துரையாடல்கள் மூலம் பெறப்பட்ட தரவு பூரணமாக்கியது. ஆராய்ச்சி குழுவினர் ஆராய்ச்சி வினாக்களைக் கொண்ட ஒரு சரிபார்த்தல் பட்டியலை (check list) பின்பற்றி அதன் மூலம் இரண்டு கருப்பொருள் உப குழுக்களை நிறுவினர்-ஒன்று குடும்பங்கள் மேற்கொள்ளும் ஈடுகொடு உபாயங்களை ஆராய்வதை நோக்கமாகவும் மற்றையது காணிப் பாவனை உரிமைகளை ஆராய்வதை நோக்கமாகவும் கொண்டது.

<u>ஆய்வின் வரையறைகள்</u>
IFSP–CATAD செயற்திட்டத்திற்கு இருந்த மட்டுப்படுத்தப்பட்ட காலவரையறையான மூன்று மாதத்திற்குள் அது மக்களின் நடத்தை முறைகளை (behavioural pattern) புரிந்து கொள்வதை நோக்கமாகக் கொண்ட தர ஆய்வு முறைகளைப் பயன்படுத்தியது. தெரிவு செய்யப்பட்ட மாதிரி (sample) கிராமங்களும் நடத்தப்பட்ட நேர்காணல்களும் ஒப்பீட்டளவில் சிறியன. IFSP–CATAD ஒரு பெரிய அளவிலான வினாக்கொத்து ஆய்வு முறையை நடத்தவில்லை. இதன் விளைவாக நாம் பெற்ற ஆய்வு பெறுபேறுகள் திருகோணமலை மாவட்டத்தையோ அல்லது வடகிழக்கு மாகாணத்தையோ முற்று முழுதாக பிரதிநிதிப்படுத்துகிறது என்று நாம் உரிமை கோருவதற்கு நினைக்கவில்லை. முக்கிய விடயங்களைக் கவனத்தில் எடுத்து விடய ஆய்வுகளில் (case study) இருந்து பெறப்பட்ட அவதானிப்புக்களை விபரிப்பது, அவற்றைப் பகுத்தாய்வது ஆகியவற்றையே நாம் செய்வதாக நாம் கருதுகிறோம். பொருத்தமான செயற்திட்ட தலையீட்டு உபாயங்களைப் பெறுவதற்காக IFSP ஊழியர்களுடனும் பங்காளிகளிடனும் கூட்டான முறையில் அறிவைப் பெறுவதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

சிக்கலான அரசியல் அவசர நிலைகளில் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவது ஆய்வினுடைய நோக்கங்களிற்கு சில வரையறைகளை விதிக்கின்றது. “எந்தவிதமான பாதகமும் விளைவிக்காமல்”[4] இருக்குமுகமாக, ஆராய்ச்சிக்குழு, உள்ளூர் பொருளாதாரத்திலும் சமூக வாழ்விலும் மோதல் மற்றும் ஆயுதக் குழுவினர் ஆகியோர் வகிக்கும் பாத்திரங்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் தாங்கள் ஆய்வு செய்யும் அளவை மட்டுப்படுத்த

[4] செயற்திட்ட தலையீடுகள் (Anderson 1999) எண்ணியிருக்காத, எதிர்மறையான விளைவுகளை தவிர்ப்பதற்காக, அபிவிருத்தி உதவிக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு உருவமைப்பு (Framework) ”தீங்கு விளைவிக்காத” எண்ணக்கரு ஆகும். சண்டை நடைபெறும் பிரதேசங்களில் முன்னெடுத்துச் செல்லும் ஆய்வு வேலைகளுக்கு இந்த தத்துவம் பிரயோகிக்கப்பட வேண்டும்.

வேண்டியிருந்தது. இது, அடிக்கடி மாறிக் கொண்டிருக்கும் நிலைமைகளையுடைய, ஆனால் தேவைகள் நிறைந்த பிரதேசங்களில் செயற்திட்ட செயற்பாடுகளை தொடர்ந்து நடத்தவும், ஆராய்ச்சிக் குழுவில் அங்கம் வகிக்கும் இலங்கை ஆய்வாளர்களை சம்பந்தப்பட்ட பகுதியினர் பழிவாங்க எடுக்கும் நடவடிக்கைகளில் இருந்து பாதுகாக்கும் நோக்கத்திற்காகவும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் அடிக்கடி மாறிக் கொண்டிருக்கும் பாதுகாப்பு நிலைமையும் கிராம ஆய்வுகளை மேற்கொள்வதற்கு தேவையான நேரத்தையும் மட்டுப்படுத்தியது.

## ஆராய்ச்சிக் கிராமங்கள்: இலகுவில் பாதிப்புறுதன்மையும் போக்கும்

<u>கிராமத்தின் வாழ்க்கை விபரங்கள்: இலகுவில் பாதிப்புறுதன்மை, வருமான மாாக்கங்கள், போக்குகள்</u>

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஐந்து இடங்களில் ஆய்வுக் குழுவினா் தரமட்டத்திலான கிராம ஆய்வினை மேற்கொண்டனர். இக்கிராமங்களின் தெரிவிற்காக, பலதரப்பட்ட தெரிவுக் காரணிகள் ஆராயப்பட்டன: விவசாய-பொருளாதார மற்றும் சூழல் சாா்ந்த வலயங்கள், பல மட்டங்களிலுள்ள வறுமை நிலைகள், மூவினங்களையும் கருத்திற் கொண்ட அதே வேளை விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள், விடுவிக்கப்படாத பிரதேசங்கள் ஆகியவற்றிற்கு அண்மித்திருத்தல் ஆகிய தெரிவுக் காரணிகள் மூலம் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன. மேலும் IFSP இதுவரை காலமும் செயற்திட்டங்களை அமுல்படுத்தி வந்த கிராமங்களையும் எதிர்காலத்தில் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் கிராமங்களையும் ஆய்வுக் குழுவினா் தெரிவு செய்தனர். ஓரு இனமயமாக்கப்பட்ட அரசியல் சூழ்நிலை நிறைந்த இந்த சூழலில் ஆராய்ச்சி இடங்களைத் தெரிவு செய்வதே ஒரு அரசியல் நிகழ்வாக முடியலாம்.

### அட்டவணை 1: கிராம வாழ்க்கை விபரங்கள் - பாதிப்புறுதன்மை, வருமான மாாக்கங்கள், போக்குகள்[5]

| | கல்யாணபுர | கும்புறுப்பிட்டி | வட்டம் | மேன்காமம் தெகிவத்த | இத்திக்குளம் |
|---|---|---|---|---|---|
| **இலகுவில் பாதிப்புற்ற சூழல்** | சிங்கள எல்லைக் கிராமம் | ஒரு ஸ்திரமற்ற பிரதேசத்தில் உள்ள தமிழ்க் கிராமம். நல்ல வெங்காயம் விளைச்சல் | கரையோர முஸ்லீம் எல்லைக் கிராமம் | காணிப் பிரச்சனையுள்ள பதட்டம் அதிகம் உள்ள எல்லைக் கிராமம் | மிகவும் குறைந்த உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட விடுவிக்கப்படாத பிரதேசம் |
| **பிரதான வருவாய் மாாக்கம்** | நெல் ஊாகாவற் படை கூலித் தொழில் | கூலித் தொழில் வெங்காயப் பயிர்ச் செய்கை | மீன்பிடிப்பு மத்திய கிழக்கு வேலை வாய்ப்பு | நெல் கூலித் தொழில் ஊர்காவற் படை | மேட்டுநிலப் பயிர்ச் செய்கை கூலித் தொழில் |
| **பிரதான நடைமுறைகள்** | அதிகாரத்தின் எல்லையிலுள்ள வீழ்ச்சியுறக்கூடிய அபிவிருத்தி | உச்ச வெங்காய விளைச்சல் தவற விடப்படுகிறதா? | இரு பகுதியினருக்கு மிடையில் சிக்கியுள்ளனர் | காணி விடயத்தில் மனக் கசப்பு | அச்சுறுத்தல்கள் வாய்ப்புகளாக் கொண்டிருக் கின்றதா? |

அட்டவணை: 1 ஆராய்ச்சிக்காக தெரிவு செய்யப்பட்ட ஐந்து இடங்களைப் பற்றி விபரித்து, அவைகளின் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சூழல்கள், பிரதான வருமான மார்க்கங்கள் மற்றும் பிரதான நடைமுறைகள் ஆகியவற்றைப் பற்றி விவாதிக்கின்றன. ஐந்து இடங்களினுடைய வித்தியாசமான சூழல்களைப் பொறுத்து, அவைகளினுடைய போக்குகள் கணிசமான அளவில் வேறுபட்டிருந்ததை ஆய்வு குழுவினா் அவதானித்தனர்.

(i) அதிகாரத்தின் துணையுடன் கல்யாணபுர நெற்பயிற் செய்கையாளா் தங்களது நலிவுற்ற செழுமை நிலையைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாக உள்ளது கடந்த காலங்களில் இந்த சிங்களக் குடியேற்றக் கிராமம் LTTE தாக்குதல்களால் பாதிக்கப்பட்டிருந்தாலும் இங்கு வாழும் கிராமத்தினரால் இப்போதுகூட ஒரு நியாயமான அளவு பொருளாதார நிலையை (நெற்பயிாச் செய்கை, ஊாகாவற்படை வேலைவாய்ப்பு) நிலைநாட்டக் கூடியதாக உள்ளது ஏனெனில் செல்வாக்கு நிறைந்த அரசியல்வாதிகள், அதிகாரமுள்ள நிர்வாகிகள் மற்றும் ஆயுதப்




[5] விபரமான கிராம விபரங்கள் உள்ளன. மு. கொ. Devarajah 2001; Ziebell & Ziegler 2001.

படையினர் ஆகியோரின் ஆதரவு அவர்களுக்கு கிட்டக்கூடியதாக இருப்பதாலாகும்.

(ii) கும்புறுப்பிட்டி கிராமத்தில் வாழும் மக்கள் நிலாவெளிப் பகுதியில் கிடைக்கும் வெங்காய மகசூல் விளைச்சலை அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்களா? இந்தப் பகுதியில் வாழும் பல காணி உரிமையாளர்கள் தமது காணிகளை குத்தகைக்கு விடுகின்றனர். குத்தகையாளர்கள் இந்தக் காணிகளில் வெங்காயச் செய்கையை மேற்கொண்டு உயரிய இலாபத்தைப் பெற்றுக் கொள்ளும் அதேவேளை காணி உரிமையாளர்கள் ஏழ்மை நிலையிலேயே உள்ளனர்.

(iii) வட்டம் கிராமத்திலுள்ள மீன்பிடியாளர்கள் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் மறைமுகமாகவே இருந்து வருகின்றனர்: இருபகுதியாலும் நெருக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கும் இவர்கள் (தரைப்படையினர்- கடற்படையினர், LTTE) மீன்படிப் படகுகளில் முதலிட தயக்கம் காட்டி வருகின்றனர். இவர்கள் மத்தியகிழக்கு நாடுகளில் இருந்து உறவினர்கள் அனுப்பும் பணத்தை நம்பி வாழ்கின்றனர்.

(iv) காணி விடயத்தில் ஏற்பட்டுள்ள மனக்கசப்பு தமிழ்க் கிராமமான மேன்காமத்திற்கும், சிங்களக் குடியேற்றக் கிராமமான தெகிவத்தவிற்குமிடையில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

(v) இத்திக்குளத்திலே இடம்பெயர்ந்த விவசாயிகள் தமக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை வாய்ப்புகளாக மாற்றியுள்ளனர் – மேட்டுநிலப் பயிர்ச்செய்கை ஒரு நம்பகமான குடும்ப வருமானத்தை அளிக்கிறது. இந்த இடம் பெயர்ந்த விவசாயிகள் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை மூலம் தாம் பெற்ற வருமானத்தைக் கொண்டு தமது பாரம்பரிய கிராமங்களிலுள்ள தமது வீடுகளை திருத்தியமைக்கக் கூடியதாக இருந்தது. இவ்வாறாக இவர்கள் தமது சமூக முதலை மீள உருவாக்க முடிந்துள்ளனர்.

<u>இத்திக்குளத்தில் மேட்டுநிலப் பயிரச்செய்கை ஜீவனோபாயமுறை (விடுவிக்கப்படாத பிரதேசம்)</u>[6]

மக்களுடைய ஜீவனோபாயங்களுக்கு பாதிப்புறக்கூடிய சூழலால் ஏற்படும் விளைவுகள் யாவை? விடுவிக்கப்படாத பிரதேசத்திலேயுள்ள ஒரு கிராமத்தை உதாரணமாக விபரித்துக் கூறி கீழ்க்காணும் வரைபடம் நானாவிதமான மூலங்களையும் ஜீவனோபாய மாதிரியில் காண்பிக்கிறது. இத்திக்குளத்தில் இடம்பெயர்ந்து வசிக்கும் கிராமத்தினருடைய சொந்தக் கிராமம் ஒரு புராணக் கிராமமாகிய "சிறீனிவாசபுரம்" ஆகும். பாதுகாப்பு நிலைமை காரணமாக அவர்கள் அங்கிருந்து இடம்பெயர நேரிட்டது. இத்திக்குளத்திற்கு இடம்பெயர்ந்த இவர்கள் வேறு எதுவித மாக்கங்களும் இன்றி மழை வீழச்சியால் மாத்திரம் நீரப்பாசனப்படுத்தப்படும் மேட்டுநிலப் பயிரச் செய்கையில் ஈடுபட்டனர்.[7]

[6] LTTE யினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிகள் விடுவிக்கப்படாத பகுதி ஒன்று குறிப்பிடப்படுகிறது. இந்தப் பகுதிக்குள் செல்வதற்கு இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும்.

[7] மேலதிக விபரங்களுக்கு மு. கொ. Ziebell & Ziegler 2001




கிராமத்தினுடைய பாதிப்புற வைக்கும் சூழல் இரண்டு பிரதான காரணிகளால் செல்வாக்கு செலுத்தப்படுகிறது: தமது வருவாய்க்கு வெளியிட ஆளணியினரில் தங்கியிருத்தல், மோதலில் ஈடுபட்டுள்ள இரண்டு பகுதியினருடைய பிரசன்னம். இது மக்களினுடையதும் பொருட்களினதும் எளிதில் நகரும் தன்மையை மட்டுப்படுத்தி, அச்ச உணர்வையும் விரக்தியையும் உண்டு பண்ணுகிறது. மறுபக்கத்தே, சுற்றுப்புறப் பிரதேசங்களிலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் அங்குள்ள வயல்வெளிகளில் கூலிவேலை செய்து வருமானம் பெறுவதற்கு நல்ல சந்தாப்பங்களை வழங்குகிறது. தமது குடும்ப வளங்களை (5 முதன்மை ஆஸ்திகள்) ஒன்று சேர்த்து ஜீவனோபாயமுறை செயற்பாடுகளை (ஈடுகொடு உபாயங்கள்) மேற்கொள்வதற்கு மக்களால் எவ்வாறு முடிகிறது? நாம் இரண்டு ஈடுகொடு உபாயங்களை அடையாளம் காணமுடியும்: ஒன்று பொருளாதார நிலைக்கு ஈடுகொடுத்தல், இரண்டாவது பாதுகாப்பு நிலைமையை சமாளிப்பது (அரசியல் நிலைமைக்கு ஈடுகொடுத்தல்).

ஒரு பிரதான விவசாய செயற்பாடாகவும், வருமான மாாக்கமாகவும் குடும்பங்கள் பலதரப்பட்ட மேட்டுநிலப் பயிர்களைப் பயிரிடுகின்றனர். தரப்பட்ட சூழ்நிலையில் இது பல சாதக அம்சங்களைக் கொண்டுள்ளது: மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்கு குறைந்த முதலீடு மாத்திரமே தேவையாகும் இதனால் விவசாயிகள் கடன்களிலேயே தங்கியிருக்கும் நிலைமையை இது குறைக்கிறது. இத்தகைய கடன்கள் கடும் நிபந்தனைகளின் பேரிலேயே வழங்கப்படுகின்றன (கடுமையான வட்டி அல்லது வர்த்தகர்களில் தங்கியிருத்தல்). இவ்வகையான குறைந்த முதலீட்டுடன் செய்யப்படும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை மூலம் குடும்பங்கள் பயிர்ச்செய்கைக் காலப்பகுதியான ஐந்து மாதங்களுக்கு தமக்குத் தேவையான உணவையும் ஒரு தொடர்ச்சியான வருமானத்தையும் பெறக்கூடியதாக உள்ளது. மேலும் குடும்பங்கள் தமது வருமானங்களை மேலும் பெருக்கக்கூடிய வேறு வேலைகளிலும் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக அயலிலுள்ள விடுவிக்கப்பட்ட பிரதேச கிராமங்களிலுள்ள வயல் நிலங்களில் கூலித் தொழில் புரிவதன் மூலம் இவர்கள் தமது பணவருவாயையும் நெல்லையும் பெருக்கிக் கொள்கினறனர். மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, குடும்ப அங்கத்தினர் வேலைக்குச் செல்லும் முறைமையில் ஒரு நெகிழ்வான போக்கை கடைப்பிடிக்க வழி செய்கிறது ஏனெனில் பெண்கள், சிறுவர்கள் போன்றோரும் இங்கு வேலையில் ஈடுபடுகிறார்கள். இந்த வசதி நெற்பயிர்ச் செய்கை மூலம் கிடைப்பது அசாதாரணம்.

பதட்டமான பாதுகாப்பு நிலைமைகளின் போது கிராமத்தவர்கள் எவ்வாறு தம்மை அதற்கேற்றவாறு தயார் படுத்திக் கொள்கிறார்கள்? சில குடும்பத்தினர் தமது சிறு பயிர்ச்செய்கை முறையை மாற்றி பதட்ட சூழ்நிலைகளில் சோளப் பயிர்ச்செய்கையை மேற்கொள்கின்றனர். சோளம் அதிக காலத்திற்கு சேமித்து வைக்கப்படக் கூடியது ஆகையால் பதட்ட சூழ்நிலைகளில் இவற்றை சேமித்து வைத்து பதட்ட சூழ்நிலைகள் மீண்டும் தணிந்தவுடன் அவற்றை சந்தைப்படுத்த முடியும். எல்லைப் புறத்திற்கு அப்பால் இருக்கும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைந்திருக்கும் சந்தைக்கு ஆண்கள் செல்லாமல் பெண்களை அனுப்புதல் இன்னொரு ஈடுகொடு உபாயமாகும். ஆயுதப் படையினரால் ஆண்கள் துன்புறுத்தல்களுக்கு ஆளாகும் பீதியினாலேயே இந்த நடவடிக்கையை இவர்கள் மேற்கொள்கின்றனர். இந்த ஈடுகொடு உபாயங்கள் பதட்ட சூழ்நிலைகளில் கூட குடும்பங்கள்

தமது அடிப்படை ஜீவனத்தைப் பெற வழி செய்வதுபோல் காணப்படுகிறது. இறுதியாக இப்பிரதேசங்களில் மக்கள் ஜீவனோபாய மாக்கங்களில் ஈடுபடுவதற்கு முன் நிபந்தனைகளாக ஆயுத குழுவினா் கோருவதை (வரி அறவிடல், லஞ்சம்) கொடுப்பதற்கு இவர்கள் முன்வந்து தாம் பெறும் இலாபம் குறைவடைவதை ஏற்றுக்கொள்கின்றனா்.

காணிப் பாவனை உரிமைகளைப் தொடர்பாக ஒருசில விவசாயிகளே காணி உரிமைக்கான சட்டரீதியான ஆவணங்களை வைத்திருக்கிறாகள். எவ்வாறாயினும் தமது காணி பாதுகாப்பாக இருக்கிறது என்றும், வேறு எவரும் அதற்கு உரிமை கோரமாட்டாகள் என்றும் ஒரு நம்பிக்கை ஏனையவர்களுக்கு இருக்கிறது. ஏனெனில் கிராமங்களில் யார் எந்தக் காணியை துப்புரவு செய்து தமதாக்கிக் கொண்டனர் என்று சகலருக்கும் தெரிவதால் காணிப் பிரச்சனை ஏற்படும் போது அயலவா காணி உரிமையைப் பற்றி சாட்சி கூற முன்வருவா் என்னும் நம்பிக்கையே இதற்குக் காரணமாகும். இதே நேரத்தில் காணி சம்பிரதாயமற்ற முறையில் சீதன கொடுமதிக்காக துண்டாடப் படுகிறது. எவ்வாறாயினும் பயிாச் செய்கைக்காக காணி வெட்டித் துப்புரவு செய்தலை LTTE தமது கட்டுப்பாட்டினுள் வைத்துள்ளனா் என்றும் காட்டு வளங்களைப் பயன்படுத்துவது பற்றி (உ+ம் விறகு சேகரித்தல்) சட்டதிட்டங்களை அவா்கள் ஏற்படுத்தியுள்ளாா்கள் என்றும் தகவலாளிகள் தெளிவாக சுட்டிக் காட்டினா். எவ்வாறாயினும் கிராமத்தினா தமது காணிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் பெறுவதற்கும் காலக் கிரமத்தில் அவற்றை காணி உறுதிகளாக மாற்றுவதற்கும் பயிாச்செய்கை உத்தியோகத்தரையும்; (cultivation officer) அவா்கள் நாடியுள்ளனா். ஒரு எதிர்கால பாதுகாப்பிற்காக, காணி உறுதிப் பத்தரங்களை இருபகுதியினரிடமிருந்து பெற்றுக் கொண்டு, யார் எதிர்காலத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றினாலும் தமது காணி உரிமைக்கு பங்கம் வராமல் பாாத்துக் கொள்வதில் கிராமத்தவாகள் நாட்டமாயுள்ளாா்கள் என்பது போல் தெரிகிறது.

இத்திக்குளம் கிராமத்தின் விடயத்தில், இங்கு வாழ்பவா்கள் தமக்கு வெளியிலிருந்து ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்களை (மோதல்) ஒரு புதிய பொருளாதார வாய்ப்பாக மாற்றக் கூடியதாக இருந்தது: மேட்டுநிலப் பயிாச்செய்கை ஒரு நம்பகமான வருவாயை நிச்சயப்படுத்துகிறது. இந்த வருவாய் மூலம் சில கிராமத்தினா் தமது பூர்வீகக் கிராமத்தில் வீடுகள் கட்டுவதற்கு முதலிட முடிந்தது, தமது சமூக, பௌதீக முதல்களை இவ்வாறாக மீண்டும் உருவாக்க முடிந்துள்ளது. மறுபக்கத்தே, சுற்றுப்புறங்களிலுள்ள கிராமங்களில் வாழும் குத்தகை நெற்பயிாச் செய்கையாளாா்கள் தாம் பெற்ற பாதகமான கடன்கள், மற்றும் பொருட்களை சந்தைப்படுத்தலுக்கான நிபந்தனைகள் (தோப்பூரில் வியாபாரிகளினுடைய விலை நிர்ணயக் குழு) ஆகியவற்றின் காரணமாக செலவிடப்பட்ட உயர்ந்த முதல்களால் (விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கான போக்குவரத்து) தாம் மிகக் குறைந்த இலாபத்தையே பயிாச்செய்கை மூலம் பெறக் கூடியதாக இருப்பதாக முறையிட்டனா். அனேகமான வருடங்களில், பயிாச்செய்கை மூலம் கிடைக்கும் விளைச்சல் அன்றாட சீவியத்திற்கு மாத்திரமே போதுமானதாக உள்ள நிலையில், குடும்பங்களுக்குத் தேவையான மேலதிக பணவருவாயை இதன் மூலம் ஈட்டுவது மிகவும் இயலாத காரியம். ஜீவனோபாய உபாயங்களையும் அதனுடைய விளைவுகளையும் தீமானிப்பதில் செல்வாக்கு செலுத்தும் காரணியாக மோதலை மாத்திரம் கருதாமல் அவற்றைப் பாதிக்கும் சகல முக்கியமான காரணிகளையும், அவைகள் ஒன்றை ஒன்று பாதிக்கும் விதங்கள் பற்றியும், அவை எவ்வாறு ஜீவனோபாய உபாயங்களையும் அவைகளுடைய விளைவுகளையும் தீமானிக்கின்றன என்பதனை ஆராய்வதன் அவசியம் பற்றி ஜீவனோபாயமுறை அணுகுமுறை சுட்டிக் காட்டுகிறது.

## மோதலினால் பாதிப்புற்ற இனங்கள் கையாளும் ஈடுகொடு உபாயங்கள்

<u>ஈடுகொடு உபாயங்களின் மூன்று தூாண்கள்:</u>
ஜீவனோபாயமுறை மாதிரியில், ஒரு தரப்பட்ட பாதிப்புறு சூழலிலே மக்கள் நடந்து கொள்ளும் விதம் எவ்வாறு என்பதற்கு ஈடுகொடு உபாயங்கள் வரைவிலக்கணம் கூறுகிறது. மக்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு அவசியமான சில குறிப்பிட்ட ஜீவனோபாய செயற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக எவ்வாறு அவாகள் தமது முதன்மை வளங்களை ஒன்றுபடுத்தி கட்டமைப்புகளையும், நடைமுறைகளையும் பயன்படுத்துகிறாா்கள்?

> பெட்டி 2: ஈடுகொடு உபாயங்களின் வரைவிலக்கணம்
>
> தமது ஜீவனோபாயங்களை தக்க வைத்துக் கொள்ளும் முகமாகவும், உணவுப் பாதுகாப்பை அடையும் முகமாகவும் ஜீவனோபாய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மக்கள எவ்வாறு தமது முதன்மை ஆஸ்திகளை ஒன்றுபடுத்துகிறாகள்.
>
> © IFSP-CATAD 2001

ஆய்வு நடத்தப்பட்ட ஐந்து ஆய்வு இடங்களிலும் கையாளப்படும் ஈடுகொடு உபாயங்களிலுள்ள பொதுவான நடைமுறைகளையும் அவைகளிலுள்ள தனித்துவமான நுட்பங்களையும் நாம் இப்போது கவனிப்போம். மக்களுடைய நடத்தை முறை, ஜீவனோபாய செயற்பாடுகள் மற்றும் ஈடுகொடு உபாயங்கள் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட சிக்கலான தர மதிப்பீட்டு தரவிலிருந்து ஈடுகொடு உபாயங்களுக்குரிய மூன்று தூண்களை ஆய்வுக் குழுவினர் இனம் கண்டுள்ளனர்:




(i) தமது உயிருக்கு ஏற்படக்கூடிய இடரினை சமாளித்தல். உள்நாட்டு மோதலினால் உண்டாகியுள்ள உக்கிரமான சூழலால் ஏற்படுத்தப்பட்ட உயிருக்கு இடர் விளைவிக்கப்படக் கூடிய அதிகரித்த எதிர் விளைவுகளை மக்கள் எவ்வாறு எதிர் கொள்கிறார்கள் என்பதில் இது கவனம் செலுத்துகிறது.

(ii) குடும்பத்தினுடைய பொருளாதார நிலையை நிர்வகித்தல். முதன்மை ஆஸ்திகளை ஒரு குடும்பத்தினுள்ளே ஒழுங்கு படுத்துவதற்கான நானாவித உபாயங்களை இது இனம் கண்டுகொள்கிறது.

(iii) வெளியிடத்து ஆதரவை பெற்றுக் கொள்ளல். தனிநபர் ஒருவர் அல்லது சமூகங்கள் கட்டமைப்புகளையும் நடைமுறைகளையும் எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பதனையும் குறிப்பாக அவைகள் அரசியல் ஆளணியினர் மீதும் இராணுவ ஆளணியினர் மீதும் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றனர் அல்லது அவர்களுடைய சேவைகளைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பவைகளைப் பற்றி இது விவாதிக்கிறது.

<u>முதலாவது தூண்: தமது உயிருக்கு இடர் ஏற்படுவதை சமாளித்தல்:</u>

உள்நாட்டு மோதல் காரணமாக தமக்கு ஏற்பட்டுள்ள அதிகரித்த உயிராபத்தினை சமாளிப்பதற்காக தனிநபர்களும் சமூகங்களும் எவ்வாறு தமது தக்கவைப்பு உபாயங்களை மாற்றி அமைக்கின்றனர் என்பதை முதலாவது தூண் மதிப்பிடுகிறது. அநேகமான சந்தர்ப்பங்களில் மக்கள் தமக்கு ஏற்படக் கூடிய இடரை குறைக்கும் முகமாக பலதரப்பட்ட உபாயங்களைக் கையாள்கின்றனர். எவ்வாறாயினும் சில குறிப்பிட்ட சந்தாப்பங்களில், மக்கள் தமது ஏழ்மை நிலையின் சுமை காரணமாக தாம் வருமானத்தை எவ்வகையிலும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்தற்காக சுயமாகவே, தமது உயிருக்கு ஏறபடக்கூடிய இடரினையும் பொருட்படுத்தாமல் பொருளாதார செயற்பாடுகளை மேற்கொள்கினறனர்:

- ✓ ஒரு சாதாரணமான உபாயம் யாதெனில் தமது இருப்பிடங்கள் அல்லது கமங்களை கைவிட்டு தற்காலிகமாகவோ அல்லது முற்றாகவோ அகன்றுவிடுதல் ஆகும். அநேக கிராமத்தவர் தமது கிராமங்களை விட்டு குடிபெயாந்துள்ளனர். இவ்வாறு அகலாமல் இருப்பவர்கள் அநேகமான சந்தர்ப்பங்களில் ஒரு புதிய வாழ்க்கையை புதிய இடங்களில் ஆரம்பிபபதற்கு தேவையான வசதி இல்லாதவர்களாக இருக்கினறனர். இது தவிர, ஆய்வு நடத்தப்பட்ட இரு சிங்கள கிராமங்களிலும் அநேகமான விவசாயிகள் இலங்கையின் அமைதி வலயங்களிலுள்ள தமது உறவினர்களுடன் தங்கியிருந்து கொண்டு பயிர்ச்செய்கைக் காலங்களில் மாத்திரம் திரும்புவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் பிள்ளைகளை பாதுகாப்பான பிரதேசங்களிலுள்ள நகரங்களுக்கு அங்குள்ள உறவினர்களுடன் தங்கியிருந்து சிறந்த கல்வியைப் பெறுவதற்காகவும் அனுப்புவது ஒரு சாதாரண நிகழ்வாகும்.
- ✓ சிங்கள எல்லைக் கிராமமாகிய கல்யாணபுரதில் அங்கு வசிக்கும் சில விவசாயிகள் தமது வயல்களில் அறுவடை செய்வதற்கு முஸ்லிம் கூலியாட்களை வேலைக்கமர்த்தி உள்ளனர் ஏனெனில் LTTE தாக்குதல்களின் கடுமை இந்த சமூகத்தின் மீது குறைவாக இருக்கிறது..
- ✓ பதட்டம் நிலவும் காலங்களில் இத்திக்குளம் (விடுவிக்கப்படாத பிரதேசம்) கிராமத்தில் வசிக்கும் கிராமத்தினர், ஆண்கள் சோதனைச் சாவடிகளில் வைத்து ஆயுதப்

படையினரால் துன்புறுத்தப் படுவார்கள் என்னும் அச்ச உணர்வால், சோதனைச் சாவடிகள் ஊடாக பெண்களையும் முதியவர்களையும் அனுப்புவதற்கு விரும்புவாாகள்.[8]

- ✓ ஆய்வு நடத்தப்பட்ட இரண்டு சிங்களக் கிராமங்களிலும் உள்ள விவசாயிகள் LTTE தாக்குதல் வீதங்களை அல்லது ஆட்கடத்தல் வீதங்களை குறைத்தலின் பொருட்டு *தமது நிலங்களில் குழுவினராக நின்று வேலை செய்வர்.* மேலும் பதட்ட காலங்களில் தமது நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகளுக்கு தரைப் படையினர் பாதுகாப்பு வழங்குவர். எவ்வாறாயினும் விவசாயிகள் தமது நிலங்களில் அச்ச உணர்வு காரணமாக பகல் வேளைகளில் மாத்திரம் வேலைசெய்ய முடிகிறது. இதனால் பயிாச்செய்கைக் காலங்களில் அவர்களுக்குத் தேவையான மேலதிக வேலை நேரம் கணிசமான அளவில் இவர்களுக்குக் கிடைக்காமல் போகிறது.

மறுபக்கத்தில் வறுமைநிலை காரணமாக சிலர் பெரும் ஆபத்துக்களை சந்திக்க நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர்:

- ✓ வட்டம் கிராமத்தில் வசிக்கும் முஸ்லிம் சமூகத்தினர், ஒரு குறிப்பிட்ட கடற்பரப்பில் பெருந்தொகையான மீன் பிடிபடக் கூடிய சாத்தியக்கூறுகள் இருந்தால் கடற்படையினரால் அமுல்படுத்தப்பட்டுள்ள மீன்பிடி பாதுகாப்பு வலயத்தை இடையிடை மீறிச் சென்று மீன்பிடிப்பில் ஈடுபடுவர். ஒரு உயரிய பொருளாதார இலாபத்தை அடைவதற்காக அவர்கள் அந்த ஆபத்தை எதிர்கொள்கின்றனர்.
- ✓ இத்திக்குளம் கிராமத்திலுள்ள ஏழை விதைவைகளின் பிள்ளைகள் அருகிலுள்ள காடுகளில், அங்குள்ள காட்டு மிருகங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும், அங்கிருக்கும் ஆயதம் தரித்த ஆளணியினரால் (படையினர், LTTE) ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் விறகு சேகரிக்கச் செல்கின்றனர்.

இந்த இடர்கள் உண்டாகும் சந்தர்ப்பங்களை குறைவாக்கும் அல்லது இடர்களை வலிந்து எதிர் கொள்ளும் உபாயங்களை திருகோணமலை மாவட்டத்திலுள்ள வன்முறையில் ஈடுபடும் சமூகங்களுடனும் நீடித்துக் கொண்டு செல்லும் யுத்தத்துடனும் தெளிவாக சம்பந்தப் படுத்தலாம்.

<u>இரண்டாவது தூண்: குடும்ப பொருளாதார நிலையை நிர்வகித்தல்</u>
தமது பொருளாதாரத் தேவைகளுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக மக்கள் தமது குடும்ப வளங்களான ஐந்து முதன்மை ஆஸ்திகளையும் எவ்வாறு ஒன்றிணைத்து, சரிப்படுத்தி மற்றும் மீள் ஒழுங்குபடுத்துகிறார்கள் என்பதில் இரண்டாவது தூண் கவனம் செலுத்துகிறது. நாம் நான்கு உப பிரிவுகளை இனம் காண்கிறோம் :

*(1) வருமானத்தைப் பெறல் (பணம் அல்லது உதவி)*

- ✓ *வருவாயைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புகளிற்காக மேற்கொள்ளப்படும் குடியகல்வு* சகல இடங்களிலும் பரவியுள்ள ஒரு ஈடுகொடு உபாயமாகும். இவ்வகையான குடியகல்வு இலங்கையின் சகல பிரதேசங்களிலும் வறிய நிலையிலுள்ள பகுதிகளில் நடைபெறும் ஒரு சாதாரண நிகழ்வாகும் (K.nfh.Dunham & Edwards 1997; Shanmugaratnam 1999; World Bank 2000). மத்திய கிழக்கிற்கு வேலைவாய்ப்பு தேடி குடியகல்வோரையும், தற்காலிகமாக தொழில் வாய்ப்புகளைத் தேடி குடியகல்வோரையும் நாம் வேறுபடுத்தலாம். பெண்களே விசேடமாக மத்திய கிழக்கிற்கு வீட்டுப் பணிப்பெண்ணாக வேலை தேடிச் செல்கின்றனர். ஒருசில சந்தாப்பங்களில், தமது பிள்ளைகள் ஒரு பாதுகாப்பான சூழலில் இருந்து வளரவும், குடும்பத்திற்கு இதன் மூலம் ஒரு சிறிய மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளவும் திருகோணமலை போன்ற நகரங்களுக்கு வீட்டுப் பணியாளர்களாக வேலைக்கு அனுப்புகிறார்கள். வருடம் ஒருமுறை ஒரு வரையறுக்கப்பட்ட காலப் பகுதியில் கணிசமான வருவாயைப் பெற்றுத் தரக்கூடியதான வயல்நிலங்கள் அல்லது வெங்காயப் பயிாச்செய்கை நிலங்கள் போன்றவற்றிற்கு தொழில் தேடி தற்காலிகமாக குடியகல்வது ஒரு வழமையான உபாயமாகும். அநேகமான சந்தாப்பங்களில் குத்தகைக்கார விவசாயிகள் அல்லது காணிச் சொந்தக்கார் விவசாயிகள் கூட தமது விவசாய சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு தேவையான பணவருவாயைக் கூட்டுவதற்காக கூலித் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

---

[8] இந்த ஈடுபொடு உபாயம் மட்டக்களப்பில் இருந்து அறிவிக்கப்பட்டது மு. கொ. Good hand and Lewer 1999.

- ✓ *ஒரு சில பிரதான பண வருவாய் மார்க்கங்களில் மாத்திரம் விவசாயிகள் ஈடுபடுகின்றனர்.* மோதல் கால நிலைமை விவசாயிகளின் பணவருவாய் மார்க்கங்களை தெரிவு செய்வதையும் அதற்கான சந்தர்ப்பங்களையும் மட்டுப்படுத்தியதால் குறிப்பிட்ட ஒருசில பிரதான பணவருவாய் மாக்கங்களில் மாத்திரம் இவர்கள் ஈடுபடக் கூடியதாக உள்ளது. அநேகமான சந்தர்ப்பங்களில் காட்டு வளங்கள் இவர்களுக்குக் கிட்டுவதில்லை, மேலும் கடந்தகால வன்முறையின் போது கால்நடை வளர்ப்புகளை இவர்கள் இழந்திருக்கிறார்கள். கல்யாணபுர கிராமத்தினர், தமக்கு ஊர்காவல் படை வேலைவாய்ப்பு மூலம் போதியளவு வருமானம் கிடைப்பதால் கால்நடை வளர்ப்பில் தாம் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவு ஆர்வமே காட்டுவதாக கூறினர். வயல்காணிகளில் பல்லினப் பயிர்ச்செய்கை மிக அரிதாக மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறு அரச திட்டங்களுக்கு ஊடாக வயல்வெளிகளில் பல்லினப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க பல நடவடிக்கைகளை எடுத்திருந்தும் இலங்கையில் வயல் நிலங்களில் நெற்பயிர்ச் செய்கை மாத்திரமே மேற்கொள்ளப்படுவது ஒரு வழமையான நடைமுறையாகும்.
- ✓ *சட்ட விரோதமாக மதுபானம் தயாரித்தல்.* தமக்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, சட்டவிரோத மதுபானத்தயாரிப்பில் சில பாதிப்புறக்கூடிய குடும்பங்கள், விசேடமாக பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் (விதவைகள்) ஈடுபடுகின்றனர். ஆய்வு நடத்தப்பட்ட சில கிராமங்களில் சட்டவிரோத மதுபானம் பாவிப்பதால் ஏற்படும் தாக்கங்கள் மிக மோசமானவையாக இருந்தன. மதுபானப்பாவனை மிகவும் பரந்துபட்டதாக உள்ளது. இதனுடைய பாவனையால் ஏற்படும் எதிர்மறையான விளைவுகள் குடும்பங்களில் வன்முறை, பாதிப்புக்குள்ளாகும் தேகநலம், தொழில் செயவதற்கு ஆர்வமும் திறமையும் குன்றல் போன்றவற்றின் மூலம் நிரூபணமாகி உள்ளன. அதிகாரங்களை தம்வசம் வைத்திருப்பவர்களும் அரசாங்கமும் இந்தப் பிரச்சனையை நன்கு அறிந்திருந்தும் அவர்களால் இந்த சட்டவிரோத மதுபானம் தயாரித்தலிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முடிவதில்லை. LTTE கூட இத்திக்குளம் கிராமத்தில் வசிக்கும் விதவைகள் சட்டவிரோத மதுபானம் காய்ச்சுவதை தடுப்பதை தவிர்த்துக் கொள்கிறார்கள்.
- ✓ *ஊர்காவற்படை சேவைகள்.* எல்லைப்புற கிராமங்களிலுள்ள சிங்கள் விவசாயிகளுக்கு ஒரு கணிசமானதும், உறுதியானதுமான வருமானத்தை ஊர்காவற்படை சேவைகள் பெற்றுத் தருகிறது (ஏறத்தாழ இது. ரூ.5000). LTTE தாக்குதல்களிலிருந்து தமது கிராமங்களைப் பாதுகாப்பதற்காக ஊர்காவற் படையினர் இரவு வேளைகளில் படையினருக்குப் பதிலாக செயற்படுகிறார்கள். இந்த வருமானத்தின் மூலம் ஒரு செயற்கையான பணப்புழக்கம் கிராமத்து பொருளாதாரத்திற்கு ஏற்படுகிறது. இந்தப் பணப் புழக்கம் விவசாயிகளை தமது பயிரச்செய்கை செயற்பாடுகளை பலதரப்படுத்தி விஸ்தரிப்பதை உற்சாகம் குன்ற வைக்கிறது.
- ✓ *விறகு விற்பனை.* விடுவிக்கப் படாத பிரதேசங்களில் விறகு விற்பனை ஒரு இலாபகரமான தொழிலாகும். எவ்வாறாயினும் காட்டில் விறகு சேகரித்தலுக்கான வாய்ப்புகளை LTTE கட்டுப்படுத்துகிறது. இதனிடை விறகு வியாபாரிகள் சோதனைச் சாவடிகள் ஊடாக செல்லும் போது விறகுகளில் ஒருபகுதி படையினர் வசம் விடப்படுகிறது (இலஞ்சம்).

*(2) குடும்பத்தினை ஒழுங்கமைத்தல் :*

- ✓ விடுவிக்கப்படாத பகுதிகளில் உள்ள இத்திக்குளம் கிராமத்தில் உள்ள குடும்பங்களில் பாதுகாப்புக் காரணங்களுக்காக அல்லது தொழில் தேடி கணவன்மார் தற்காலிகமாக குடியகல்ந்திருக்கும் சந்தர்ப்பங்களில் குடும்பங்களில் யாதேனும் முடிவெடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படுமிடத்து *முடிவுகளை எடுக்கும் முழுப் பொறுப்புகளையும் பெண்களிடமே விட்டுவிடுவர்.* இந்த வேளைகளில் எவ்வகையான பயிரை பயிரிடுவது, பொருட்களை சந்தைப்படுத்தல் மற்றும் செலவினங்கள் சம்பந்தமான முடிவுகளை பெண்கள் தாமாகவே மேற்கொள்வர்.
- ✓ *மேட்டுநிலப் பயிரச் செய்கைகளில் பிள்ளைகள் இணைந்து கொள்ளல்.* இத்திக்குளம் பகுதியில் (விடுவிக்கப்படாத பிரதேசம்) மேட்டுநிலப் பயிர்ச் செய்கையின் போது பிள்ளைகளும் ஈடுபடுகின்றனர். இந்த நிலை விசேடமாக, குடும்பத்தில் வேலைக்குச் செல்லும் ஒருவர் தமது பொருளாதார செயற்பாடுகளுக்காக தற்காலிகமாக வீட்டை விட்டு சென்றிருக்கும் போது ஏற்படுகிறது. மேலும் வெளியேறியிருக்கும் இளைஞர்கள் பதட்டமான காலப் பகுதியில் பாதுகாப்பு காரணங்களுக்காக மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பி மேட்டுநிலப் பயிச் செய்கையில் தமது குடும்பத்தினருக்கு

உதவியாக இருப்பர். இந்த நேரங்களில் குடும்பங்களிலுள்ள பெண்கள் அல்லது முதியவர்கள் சோதனைச் சாவடிகள் ஊடாக சந்தைகளுக்குச் சென்று வருவர்.

- ✓ *பயிரச் செய்கையில் அயலவர்களுடன் வேலைகளைப் பகிர்ந்து கொள்ளல்.* இது ஒரு பாரம்பரிய வழக்கமாக இருந்தது. ஆய்வுக் கிராமங்களில் தற்போதும் இருந்துவரும் இந்தப் பாரம்பரியம் அங்கு விவசாயத் துறையில் செலுத்தும் பங்களிப்பு கிராமத்துக்குக் கிராமம் கணிசமான அளவில் வேறுபடுகிறது. சிங்கள எல்லைக் கிராமமாகிய கல்யாணபுரவில் அயலவர்களின் உதவியும் குழுவாக வேலை செய்வதும் அதிகரித்துள்ளது. இந்த ஏற்பாட்டை அவர்கள் LTTE யினரின் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு உத்தியாக பயன்படுத்துகின்றனர். மறுபக்கத்தே, தமிழ்க் கிராமமாகிய கும்புறுப்பிட்டியில் கணிசமான எண்ணிக்கையிலான கிராமத்தினரின் இடப் பெயர்வும் வெளியிடங்களுக்கு குடியகல்தலும் அவர்களுடைய சமூக பிணைப்புகளையும் அயலவர்களுடன் கூட்டாக வேலை செய்தலையும் பலவீனப் படுத்தி ஸ்தம்பிதமடைய துணை போகின்றன.
- ✓ *தொழில் பகிர்வு* குறிப்பிடத்தக்க அளவு மாற்றமடையவில்லை. பாரம்பரிய முறையான பால் (geneder) ரீதியில் தொழில்களை பிரித்தெடுத்தல் மற்றும் சமூக முறைமைகள் ஆகியவற்றை அவசியமேற்படும் காலங்களில் குடும்பங்கள் தளர்த்துகின்றன என கிராமத்தினர் கூறினர். என்றாலும் அநேகமான சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு நிலைமைகள் மேலும் சீராகியவுடன் குடும்பங்கள் தமது பாரம்பரிய வழமைகளுக்கு மீண்டும் திரும்புவர். ஆகவே ஆண்-பெண் இருபாலருக்குமிடையிலான இவ்வகையான மாறுதல்கள், பன்னெடுங் காலமாக இருக்கும் ஆண்-பெண் உறவுகளின் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தாமல், பிரதானமாக வெளிச் சக்திகளால் தற்காலிகமாக ஏற்படுத்தப் படுகிறது.

*(3) செலவினங்களையும் முதலீடுகளையும் நிர்வகித்தல்:*

- ✓ *முதலீட்டு தெரிவுகள்:* முதலீடுகளை செய்யும்போது அவற்றிற்கு எவ்வாறு குடும்பங்கள் முன்னுரிமை அளிக்கின்றன, எங்கு முன்னுரிமை அளிக்கின்றன என்ற விடயங்களில் கடைப் பிடிக்கப்படும் போக்குகள் ஒன்றுடன ஒன்று முரண்படுகின்றன. அநேகமான கிராமங்களில் வாழும் குடும்பங்கள் இடம்பெயர நேரிடும் சந்தர்ப்பங்களில் தாம் கொண்டு செல்ல இலகுவாக இருக்கும் அசையக்கூடிய பொருட்கள் (ஆபரணங்கள், தொலைக்காட்சிப் பெட்டி) போன்றவற்றின் மீது முதலீடு செய்வதற்கு கூடுதலாக விரும்புவது ஒரு பொதுவான நடைமுறையாகும். எவ்வாறாயினும் ஆய்வு நடத்தப்பட்ட இரண்டு இடங்களில் (வட்டம், இத்திக்குளம்) கிராமங்கள் இரண்டும் விடுவிக்கப்பட்ட பிரதேசத்திற்கும் விடுவிக்கப்படாத பிரதேசத்திற்கும் இடைப்பட்ட எல்லைக்கருகில் அமைந்திருந்தாலும் அங்கு வசிக்கும் அநேகமான குடும்பங்கள் வீடுகளை நிர்மாணிப்பதற்கு முதலீடு செய்கின்றனர். இந்த பாதுகாப்பற்ற பகுதிகளில் இம்மாதிரியான முதலீட்டுகளுக்கு எதிர்மாறான முதலீட்டு உபாயங்களை எதிர்பார்த்த ஆய்வு குழுவினருக்கு இந்த அவதானிப்பு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. மேலும் வட்டம் கிராமத்தினர் வீட்டு நிர்மாண வேலைகளுக்கு முதலீடு செய்கின்றனர் (வெளிநாட்டு வேலைவாய்ப்புகளால் அனுப்பப்படும் பணம்). ஆனால் இவர்கள் தம்மிடமிருந்து வரிகள் அறவிடப்படுவதை தவிர்ப்பதற்காகவும், முதலீட்டு இழப்புகளை தவிர்ப்பதற்காகவும் (ஆயதம் தரித்த ஆளணியினர் தொழில் உபகரணங்களை இடையிடை பறிமுதல் செய்வதுண்டு) வருவாய் பெற்றுத் தரக்கூடிய மீன்பிடி உபகரணங்களில் முதலீடு செய்ய தயக்கம் காட்டுகிறார்கள்.
- ✓ *குத்தகைக்காரரிடையே வேலைகள் பரிமாற்றம் செய்தல்.* போருளாதார கஷ்டநிலை ஏற்படும் சமயத்திலும், இடர் ஏற்படும் கால கட்டங்களிலும் பயிர்ச்செய்கை செலவினங்களைக் குறைக்கும் பொருட்டு கூலியாட்களை வேலைக்கமாத்துவதற்குப் பதிலாக குத்தகைக்காரர்கள் தம்மிடையே வேலைகளைப் பகிர்ந்து கொள்ளுவார்கள்.
- ✓ *சமூக அந்தஸ்தினை மதிப்பிறக்கல்.* பணக் கஷ்டமான காலங்களின் போது தாம் இருக்கும் சமூக அந்தஸ்தில் இருந்து கீழிறங்கி வருதல் ஒரு உபாயமாகும். பொழுதுபோக்கு, கொண்டாட்டங்கள், சொகுசு பொருட்களை கொள்வனவு செய்தல் ஆகியனவற்றிற்கு தாம் ஒதுக்கும் நிதியினை கஷ்டமான நிலைமைகளின் போது குடும்பங்கள் குறைத்துக் கொள்கின்றன. பொருளாதார அழுத்தங்கள் அல்லது இடர் என்பவற்றிற்கு முகம் கொடுக்க நேரிடும் போது இந்த உபாயத்தைக் கையாளல் வறிய குடும்பங்களின் ஒரு வழமையான ஈடுகொடு உபாயமாகும்.

- ✓ *சம்பிரதாயமற்ற சந்தைப்படுத்தும் முறைகளை மேற்கொள்ளல்.* விடுவிக்கப்படாத பிரதேசங்கள், பகுதி விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் ஆகியவற்றிற்கு உணவு வகைகளை எடுத்துச் செல்வதில் உள்ள பாதுகாப்புத் தடைகள், மக்கள் உணவுச் சந்தை முறைகளை கையாள்வதில் ஒரு நெகிழச்சி முறையை கடைப்பிடிக்க நிர்ப்பந்திக்கின்றன. அவர்கள் உணவுப் பொருட்களை இப்பிரதேசங்களுக்கு கடத்திச் சென்று தடைசெய்யப்பட்ட பொருட்களை தமது அயலவர் மத்தியில் பண்டமாற்றம் செய்து தமக்கு உலர் உணவுப் பங்கீட்டின் மூலம் கிடைக்கும் உணவுப் பொருட்களை பணமாக மாற்றிக் கொள்கின்றனர்.

- ✓ *கடன் அடிப்படையில் பொருட்களை கொள்வனவு செய்தல்.* விவசாய உற்பத்தி மூலம் அல்லது கூலித் தொழில் மூலம் எதுவித வருமானமும் கிடைக்காமல் இருக்கும் வேளைகளில் ஏற்படும் தாழ்ந்த பொருளாதார நிலைமைகளின் போது அவைகளைச் சமாளிப்பதற்கு கடன் அடிப்படையில் பொருட்களைக் கொள்வனவு செய்தல் ஒரு ஈடுகொடு உபாயமாகிறது. சில சந்தாப்பங்களில் கடை உரிமையாளர்கள் அல்லது *முதலாளிகள்* தமக்கு வரவேண்டிய முழுக் கடனையும் ஏழை கிராமத்தவரிடம் இருந்து அறவிடாமல் அவர்களை மீணடும் தம்மிடமே வருமாறு கடமைப் படுத்தி தமது பொருட்களை சந்தைப்படுத்த பயன்படுத்துகிறார்கள்.

<u>மூன்றாவது தூண்: வெளியிடத்து உதவியைப் பெறல்</u>

வெளியிடத்து ஆதரவினைப் பெற்றுக் கொள்வதற்காக குடும்பங்களும் தனிநபர்களும் பலதரப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த ஆளணியினரை அணுகி செல்வாக்கு செலுத்துகிறார்கள். ஜீவனோபாயமுறை மாதிரியில் இந்த உபாயம் கட்டமைப்புகளையும், நடைமுறைகளையும் குறிப்பதுடன், ஒருபுறத்தே இவைகள் எவ்வாறு குடும்பங்களினுடைய நடத்தை முறைகளில் (behavioural pattern) செல்வாக்கு செலுத்துகின்றன என்பதனையும் மறுபுறத்தே எவ்வாறு குடும்பங்கள் இவைகளை தமது அனுகூலங்களுக்காக பயன்படுத்துகின்றன என்பதனையும் குறிக்கின்றன. அதிகாரங்களை தம்வசம் வைத்திருப்பவர்களுடன் உறவு பூண்டுள்ள குடும்பங்கள் அல்லது சமூகங்கள் என்று நாம் வரைவிலக்கணப் படுத்திய குடும்பங்களின் அரசியல் தலைமை இனங்களைப் பொறுத்து வித்தியாசப்படுகிறது. திருகோணமலையில் இது, முஸ்லிம்களும் சிங்களவர்களும் தமது வலைப் பின்னல்களை அரசியல்வாதிகளுடனும் (3) முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒரு சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்) ஆயுதப் படையினருடனும் பகிர்ந்து கொள்ளும் அதேநேரம் தமிழ் மக்கள் திருகோணமலை மாவட்டத்திலும், மாகாண நிர்வாக துறையிலும் மேலும் ஆழமாக வேரூன்றி LTTE ஐ ஒரு அச்சுறுத்தலாக எந்நேரமும் முன் கொண்டுவர முடியும். இந்த முறையிலான அரசியல் - பொருளாதார ஆதரவு இனங்களுக்கிடையிலான பிளவுகளையும், மனத்தாங்கல்களையும் மேலும் மோசமாக்கிக் கொண்டு செல்வதை கவலையுடன் அவதானிக்கப்பட்டது. மூன்றாவது தூண்கல்லை நாம் மூன்று வகையாக வேறுபடுத்தலாம். 1. அதிகாரங்களை தம்வசம் வைத்திருப்பவர்களுடன் கூட்டு வைத்திருந்து தமக்கு தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களுடன் வலைப் பின்னல்களை ஏற்படுத்துவது ஒரு வெளிப்படையான உபாயமாகவுள்ள அதேவேளை (2) பலாத்கார குழுக்களுடைய நிர்ப்பந்தமான கோரல்களை எதிர் கொள்வதற்காக ஆயத குழுவினர் கேட்பதைக் கொடுப்பது ஒரு மந்தமான உபாயமாக உள்ளது.

*(1) அதிகாரங்களைக் கொண்டவர்களுடன் கூட்டு ஏற்படுத்தல்*

- ✓ விசேட அனுகூலங்களை, உதாரணமாக, சமுர்த்தி முத்திரைகள் அல்லது காணி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும், மீள் குடியேற்றங்களுக்காக வழங்கப்படும் நிதியை பெற்றுக் கொள்வதற்காகவும் அரச *உத்தியோகத்தருடன் நல்லுறவை வைத்திருப்பதற்கு கிராமத்தவர் (தனி நபாகளாக) முனைகின்றனர்.* விடுவிக்கப்படாத பிரதேசங்களில் உள்ள குடும்பங்களால் இந்த உபாயத்தை மிக அரிதாகவே பின்பற்ற முடிகிறது ஏனெனில் இந்தவகை நிர்வாக முறைகள் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மிக அரிதாக செயற்படுகிறது.

- ✓ நிதி ஒதுக்கீடுகளிலும், காணிகளை மாற்றம் செய்வது போன்ற காரியங்களை தமக்கு சாதகமான நிலையைப் பெற்றுக் கொள்வதற்காக அல்லது தாம் விரும்புவதை ஏனையோர் மீத திணிப்பதற்காக *அதிகாரங்களைக் கொண்ட நிர்வாகிகளுடனும், அரசியல்வாதினளுடனும் வலைப் பின்னல்களை உருவாக்குவது* சில இனங்களினதும், தனியாட்களினதும் ஒரு சக்தி மிக்க உத்தியாக உள்ளது.

- ✓ ஒரு மேலும் பரந்த பொருளாதார செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு - உதாரணமாக வியாபாரம் - *ஆயதப் படையினருடன் கூட்டுறவை ஏற்படுத்திக் கொள்வது* ஒரு முன் நிபந்தனையாக உள்ளது. இது சோதனைச் சாவடிகளில் படையினரால் வியாபாரிகள் ஒரு நெகிழ்வான முறையில் கையாளப்படுவதற்கு உதவும். கல்யாணபுரவில், எல்லைப்

புறத்திற்கு அருகாமையில், நிலங்களில் விவசாயிகள் வேலையில் ஈடுபட்டிருக்கும் போது படையினர் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவர்.

- ✓ *வேண்டுமென்றே கூட்டுச் சேராமை:* இரண்டு சந்தர்ப்பங்களில் - வட்டம், இத்திக்குளம் ஆகிய பகுதிகளில் - கிராமத்தினர் எந்தவொரு பகுதியினருக்கும் ஒத்துழைப்பு தருவதை தவிர்த்து வருகின்றனர் ஏனெனில் மோதலில் ஈடுபட்டிருக்கும் ஒரு பகுதியினருடன் கூட்டை ஏற்படுத்தினால் மற்றப் பகுதி தம்மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் என அவாகள் அஞ்சுகின்றனர். இந்த இரண்டு கிராமங்களும் எல்லையில் அமைந்துள்ளன.

*(2) ஆயதம் தரித்த ஆளணியினரின் கோரல்களை நிறைவேற்றல்*

- ✓ பலவந்தமாக திணிக்கப்பட்ட வரிகளென்றாலும், மோதலில் ஈடுபட்டுள்ள இரு பகுதிகளுக்கும் இலஞ்சம் என்றாலும் கிராமத்தினர் பொதுவாக ஆயதம் தரித்த ஆளணியினரின் தேவைகளை நிறைவேற்றுவர். என்றாலும் தமது பொருளாதார அந்தஸ்தை மூடிமறைப்பதன் மூலமும் மற்றும் வேறு உபாயங்கள் மூலமும் வரி அறவிடுதலில் இருந்து தப்புவதற்கான சில தந்திரங்களைக் கண்டு பிடித்துள்ளார்கள்.

*(3) அரச உதவி, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி ஆகியவற்றைப் பெற தகுதி பெறல்*

- ✓ *உண்மையான* பொருளாதார நிலையை மூடிமறைத்தல் சகல கிராமங்களிலும் நிலவும் ஒரு வழமையான உபாயமாகும். நானாவித நிறுவனங்களிடமிருந்து கிடைக்கக் கூடிய சேமநல உதவி, செயற்திட்ட உதவி, நிவாரணம் ஆகியவற்றைப் பெறுவதற்குரிய தெரிவுப் பிரமாணங்களை திருப்திப் படுத்துவதற்காக கிராமத்தவர் நேர்காணலின் போது தமது சமூக, பொருளாதார நிலைமைகளையும் வருமானம் மற்றும் தமது உடமைகள் ஆகியவற்றை குறைத்து மதிப்பிட்டு வெளிப்படுத்துவர். அரசிடமிருந்து மீள்குடியேற்ற உதவிவைப் பெறுவதற்காக, கிராமத்தவர் ஒரு சந்தாப்பத்தில், பாதுகாப்பு நிலைமைகள் மீண்டும் சீரான நிலைமைக்குத் திரும்பியும் கூட, தாம் சமீபத்தில் இடம் பெயர்ந்திருந்ததாகக் கூட அறிவித்திருந்தனர்.
- ✓ *அரச நிறுவனங்களோடும், அரச சாபற்ற நிறுவனங்களோடும் தொடர்பு கொள்ளவும், அவைகளைக் கவரவும் தேவையான ஒரு சாதனமான சமூக அடிப்படை நிறுவனங்களை (CBO) சமூகங்கள் எவ்வாறு நிறுவி பயன்படுத்துகினறனர்* என்பதன் நடைமுறைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றன. சிங்கள கிராமமாகிய கல்யாணபுரவில், ஒரு உயர்வாக மதிக்கப்படும் ஒரு தலைவரைக் கொண்ட, ஒரு நல்ல முறையில் உருவாகிய உறுதியான விவசாய அமைப்பு அதிகாரம் படைத்த நிர்வாகிகளுடனும், அரசியல்வாதிகளுடனும் நெருங்கிய தொடர்புகளை வைத்துக் கொள்ளக்கூடியது. இந்தத் தொடர்பு, விவசாயிகள் தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், அரச உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்களுக்கு உதவுகிறது. மற்றைய சந்தர்ப்பங்களில் இடம் பெயர்வும் குடியகல்தலும் இனங்களின் சமூக மூலங்களைத் தகாத்து CBOக்கள் செயலிழக்கச் செய்கின்றன, ஏனெனில் அனேக சந்தர்ப்பங்களில் CBO தலைவர்களே கிராமங்களை விட்டு வெளியேறி உள்ளனர். மற்றைய கிராமத்தினர் தலைமைப் பொறுப்பை ஏற்க தயக்கம் காட்டுகின்றனர் அல்லது தலைமைப் பொறுப்பை அவர்களுக்குக் கொடுக்க மறுக்கப்படுகிறது. சில பகுதிகளில் தலைவர்களாக வரக்கூடியவர்கள் (பரம்பரை தலைவர்கள் உள்ளடங்களாக) தம்மை பெரிதாக வெளிப்படுத்தாமல் வாழ்கிறார்கள் ஏனெனில் அவர்கள் இரண்டு பகுதிகளிடமிருந்தும் தமக்கு வரக்கூடிய அழுத்தங்களைப் பற்றி அஞ்சுகிறார்கள். இவ்வாறாக சமூக அடிப்படையிலான அமைப்புகள் பொதுவாக பலவீனமாயுள்ளன.

## காணி பயன்படுத்தல் உரிமைகள்

குடும்பங்களுக்கு ஒரு பெரும் இயற்கை முதன்மை ஆஸ்தியாக காணி விளங்குகிறது. தமிழ் சமூகம் உள்ளடங்கலாக இலங்கை சமூகத்திற்கு காணிச் சொந்தம் என்பது ஒரு சமூக அந்தஸ்தைக் குறிக்கிறது அத்துடன் மக்கள் தமது கிராமத்துடனும் தமது உரிமையான காணியுடனும் ஒரு நெருங்கிய, உணர்வுபூர்வமான பந்தத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். காணி வளங்களை பயன்படுத்துவதற்கு பௌதீக முதன்மை ஆஸ்திகளான நீர்ப்பாசன

கட்டமைப்பும், உற்பத்திக்கு தேவையான சாதனங்களும் அவசியமானவையாகும். நடைபெற்றுக் கொண்டிருக்கும் மோதல் காணிப் பாவனை முறைமைகளில் இரண்டு பிரதான விடயங்களைகளை புகுத்தும் விதத்தில் தாக்கம் விளைவித்துள்ளது:

(i) *காட்டு வளங்களிற்கும் காணி வளங்களிற்கும் செல்வது மட்டுப் படுத்தப்பட்டிருத்தல் :* LTTE யினர் காட்டுப் பிரதேசங்களில் இருப்பர் என பாதுகாப்புப் படையினர் சந்தேகிப்பதால், காட்டுப் பகுதிகளுக்கு அருகாமையில் இருக்கும் வயல்நிலங்களுக்கோ அல்லது காட்டு வளங்களைப் பயன்படுத்துவதற்கோ பாதுகாப்பு நிலைமை கருதி மக்கள் அங்கு செல்வது ஆபத்தானது. சில சந்தர்ப்பங்களில், சில குறிப்பிட்ட பகுதிகளுக்கு மக்கள் செல்லுவதை ஆயுதப் படையினர் அனுமதிப்பதில்லை.

(ii) *குடியகல்வாலும், இடம் பெயர்வாலும் கைவிட்ப்பட்ட இயற்கை வளங்கள்:.* தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையற்ற பாதுகாப்பு நிலைமையில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அநேகம் மக்கள் மாவட்டத்தை விட்டு அகன்றுள்ளார்கள். அநேகம் சந்தர்ப்பங்களில் இந்த குடியகல்வோர் அல்லது இடம் பெயர்வோர் முந்தைய காலங்களில் நல்ல நிலையில் இருந்தவர்களாவர். அவர்கள் தமது காணிகளையும் ஆஸ்திகளையும் கைவிட்டுச் செல்கிறார்கள்.

இலங்கையில் தொடர்ந்து இருந்து வரும் யுத்த சூழ்நிலையில் காணிப் பாவனை உரிமைகள் ஒரு உணர்ச்சி பூர்வமானதும் அரசியல்மயப்படுத்தப்பட்டதுமான ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகியுள்ளது. பெருமட்ட அளவில் மேற்கொள்ளப்பட்ட காணிக் குடியேற்றங்களின்போது (உ+ம் கல்லோயா, மகாவலி) காணி வளங்களைப் பகிர்ந்தளிக்கும் முறைகளில் ஏற்பட்ட மனக்கசப்பே இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மோதலைத் தூண்டிய பிரதான காரணியாகும். தற்போதுள்ள நிலையற்ற காணிப் பாவனை, காணிப் பாவனை உரிமைகள் மற்றும் அத்துமீறல்கள் நிலைமைகள், அபிவிருத்திக்கு ஒரு கடுமையான தடையாக இருப்பதோடு, இது எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள இனங்களுக்கிடையே ஒரு புதிய சமூக - அரசியல் பிளவையும் ஏற்படுத்தக் கூடும். இத்தகைய சூழ்நிலைகளில், முக்கியமான பிரமுகாகள் (நிர்வாகிகளும், அரசியல்வாதிகளும்) கட்டமைப்புகளின் மட்டங்களிலும், நடைமுறைகளின் மட்டங்களிலும் காணிப் பாவனை உரிமைகளை எவ்வாறு நிாவகிக்கிறாா்கள் என்பதை இந்த ஆவணத்தின் அடுத்துவரும் பகுதி ஆராய்கிறது.

<u>காணிப் பாவனை உரிமைகளை மக்கள் கையாளும் விதம்</u>

ஒரு நீடித்துக் கொண்டிருக்கும் உள்நாட்டு யுத்தத்தின் (பெட்டிகளைப் பாாக்கவும்) தற்போதைய சூழலில் மக்களும் நிறுவனங்களும் காணிப் பாவனை உரிமைகளை எவ்வாறு கையாள்கிறாாகள் என்பதைப் பற்றி சுருக்கமாக இப்போது நான் பரிசீலப்பேன். பாவனைப் படுத்தப்படாத அரச காணிகள், கைவிடப்பட்ட காணிகள், நீர்த்தேக்க படுக்கை மற்றும் மேய்ச்சல் நிலங்கள் ஆகியவற்றில் இடம் பெறும் அத்துமீறல்கள் ஆராய்ச்சி நடைபெற்ற இடங்களில் மேற்கொள்ளப்படும் ஒரு சாதாரண நடைமுறையாகி பாரதுாரமான பிரச்சனைகளை உண்டுபண்ணுகிறது. மேலும் காணி உறுதிகளை மக்கள் சம்பிரதாயமற்ற முறைகளில் கையாள்கிறாாகள்: காணி தமதென்பதை நிருபிக்க கிராமத்தினர் எழுத்துமூல ஆவணங்களில் தங்கியிருப்பதற்குப் பதிலாக சாட்சியங்களையே நம்பியுள்ளனர். அனுமதிப் பத்திர காணிகளை மாற்றுவதற்காக அநேக கிராமத்தினர் உறவினர்களை ”விலைக்கு வாங்குகினறனர்”: அனுமதிப் பத்திர காணியை வாங்குவதற்கு உறவுமுறை ஒரு முன் நிபந்தனையாததால் காணியை விலைக்கு வாங்கும் நபருடன ஒரு போலி உறவு முறையை அவாகள் உண்டு பண்ணுகின்றனர். காணிப் பயிர்ச்செய்கையை பகிர்ந்து கொள்வது இன்னுமொரு சாதாரண நடைமுறையாகும். குடும்பங்கள் விரிந்து கொண்டு செல்ல, உத்தியோகபூர்வமாக தனி ஒருவருக்கு மாத்திரம் உரிமையுள்ள குடும்பக் காணியில் இளைஞர்கள் சந்ததி பயிர்ச்செய்கையை பகிர்ந்து கொள்கிறது.

**காணிப்பாவனை உரிமைகளை கையாளல் 1: மக்கள் ஈடுகொடுக்கும் முறைகள்**

- ஆக்கிரமித்தல். அரச காணி கைவிடப்பட்ட காணி, மேய்ச்சல் நிலம் (நீர்த்தேக்கத்தின் மேல் பகுதி)
- முறைசாரா விதத்தில் காணி உரிமைகளை கையாளல்
  - சாட்சிகள் மூலமாக காணி உரிமையை நிரூபித்தல்
  - காணி மாற்றங்களக்காக உறவுமுறைகளை சோடித்தல் (கு, வ, மே)
  - காணிகளில் பயிர்ச்செய்கையை பங்கிடுதல் (இ,க)
- வாய்மூலமானதும் முறைசாரானதுமான ஒப்பந்தங்களில் தங்கியிருத்தல்
- குத்தகையாளர்களை மாற்றுதல், காணி விற்பனைக்கு கடமைப்படுத்தப்படுவதை தவிர்த்தல்
- பயிர்ச்செய்கையின் போது ஏற்படக்கூடிய அபாய நிலைகளுக்கு குத்தகையாளரே பொறுப்பாயிருத்தல் (நிலையான குத்தகை)
  - தமது சொந்த காணியை குத்தகைக்கு கொடுத்து விட்டு கூலிக் தொழிலாளியாக வேலை செய்கல்

CATAD

காணிக் குத்தகை ஏற்பாடுகள் ஒரு நிலையான குத்தகைத் தொகையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப் படுகிறது ” பயிர்ச்செய்கையிலுள்ள இடர் குத்தகைக்காரருடையது. இதேநேரம் காணிச் சொந்தக்காரர்கள் ஒரு குத்தகையாளருடன் நீண்டகால ”குத்தகை உறவினை” தவிர்க்கினறனர். ஆகவே குத்தகை நிலங்களுக்கு அதிகம் கிராக்கி உள்ள பகுதிகளில் நிலங்களைக் குத்தகைக்கு எடுக்க எவரும் விரும்பினால் அவர்கள் தாம் ஒரு நம்பிக்கையான குத்தகையாளா என்ற ”அபிப்பிராயத்தை” காணிச் சொந்தக்காரருக்கு ஏற்படுத்தினால் மாத்திரம் அவர் அடுத்த பயிர்ச்செய்கைக் காலத்திற்கு புதிய ஒப்பந்தத்தினை பெறுவார்.

<u>நிறுவன மட்ட பிரதான ஆளணியினர் காணிப் பாவனை உரிமைகளை கையாளும் விதம்:</u>
நிர்வாகிகள், தமக்கு ஏற்படக்கூடிய அரசியல் அழுத்தத்தைப் பற்றிய அச்ச உணர்வால், பொதுவாக, காணிப் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் வெளிப்படையாக செயற்படாமலும், எவருக்கும் எதிரான நடவடிக்கைகள் எடுப்பதையோ அல்லது எதற்கும் பொறுப்பாக இருப்பதையோ தவிர்த்து வருகின்றனர் (தமது தலையை மண்ணுக்குள் புதைத்துக் கொள்ளல் என்னும் Vogel Strauss: கொள்கை). மறுபக்கத்தே காணிப் பாவனை உரிமைகளை சட்ட முரணாக நடைமுறைப் படுத்துவதை பெருமளவில் சகித்துக் கொள்கினறனர். அவர்கள் காணிப் பாவனை உரிமகளுக்கான விதிமுறைகளை தளர்த்துகின்றனர் அத்துடன் சில சந்தர்ப்பங்களில், கைவிடப்பட்ட காணிகளில் அத்துமீறி குடியேறியவர்களுக்கும் அவற்றைப் பயன்படுத்துபவர்களுக்கும் அவர்களுயை நிலையை ஸ்திரப் படுத்துவதற்காக முறையற்ற காணி உறுதிகளை வழங்குகின்றனர். பிரித்தெடுக்ப்பட்ட அரச (அனுமதிப் பத்திரக்காணி) காணியை பிறர் பெயருக்கு மாற்றுதல் அல்லது காணியொன்றிற்கு உரிமை கோருதல் ஆகியவற்றின் போது அவர்கள் மக்களால் செய்யப்பட்ட சட்ட விதிமுறைகளின் விலகல்களையும் ஏற்றுக் கொள்வார்கள்.




மறுபக்கத்தே, அதிகாரங்களை தம்வசம் வைத்திருப்போர், தமது சொந்த (இனம்) வாடிக்கையாளர்க்கே உதவிகள் புரிகின்றனர். அவர்கள், சட்ட வரைமுறைகளில் இருந்து விலகி, தமது சொந்த இனமக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நிர்வாகிகளை சட்டவரைமுறைகளில் இருந்து விலகுமாறு நிரப்பந்திக்கினறனர். இம்மாதிரியான அரசியல் தலையீடுகளை நிர்வாகிகள் எதிர்க்கும் சந்தர்ப்பங்கள் மிவும் அரிது.

நிறுவன மட்டத்தில், அதாவது கட்டமைப்புகள், நடைமுறைகள் மட்டத்தில், பிரதான ஆளணியினருடைய ஈடுகொடு உபாயங்கள் - அரச சேமநலம், பொருளாதார ஆளணியினர் (வியாபாரிகள், வங்கிகள்) அல்லது அரச சார்பற்ற அபிவிருத்தி நிறுவனங்கள் போன்ற வேறுபல செயற்பாடுகளுக்கும் தீர்மானிக்கப்படலாம். இந்த ஈடுகொடு உபாயங்களின் ஒரு பகுதி ஏற்கனவே ஆதரவாளர் சம்பாஷணை 1 இன் போது (மு.கொ.Korf 2001a) விவாதிக்கப்பட்டுள்ளன.

## ஜீவனோபாய முறைமையில் தலையீடுகள்

சமூக மட்டத்திலான தலையீடுகள் யாவும் மக்களுடைய ஈடுகொடு உபாயங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டுமென்பதை நாம் புரிந்து கொள்கின்றோம். புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் மற்றும் உணவு போஷாக்குப் பாதுகாப்பிற்கான சமூக அபிவிருத்தி ஆகிய சந்தர்ப்பங்களில் இது குறிப்பாகப் பொருந்துகிறது.



என்றாலும் அபிவிருத்தி நிறுவனங்கள் நுண் செயற்திட்டங்களை அடிக்கடி ஒன்றின் மேல் ஒன்றாக தொடர்ந்து நடைமுறைப் படுத்தியுள்ளன. இது மக்களை அழுத்திக் கொண்டிருக்கும் பாதிப்புறு சூழலில் சிறந்த உபாயங்கள் என மக்களால் அடையாளம் காணப்பட்ட உபாயங்களிற்கு உண்மையிலே ஆதரவளிக்கவில்லை.

ஆகவே சமூக உணர்வூட்டலும் அபிவிருத்தியும் ஒரு ஜீவனோபாய முறைமையில் ஒரு இரட்டை அடுக்கு உபாய தலையீட்டை நோக்கமாக கொள்ள வேண்டும். ஒருபுறத்தே பயிற்சிகளின் மூலம் குடும்பங்களின் முதன்மை ஆஸ்திகளை பலப்படுத்தல், சமுதாயத்திலே சமூக முதலை மீளக் கட்டியெழுப்புவதற்கு தேவையான சேவை வழங்குதலிற்கும் நடைமுறைகளுக்கு வசதியேற்படுத்தலிற்கும் ஆதரவளித்தல், மறுபுறத்தே கட்டமைப்புகளும் நடைமுறைகளும் ஒன்றுக்கொன்று இணக்கம் இருந்தால் மக்களால் அவர்களுடைய ஈடுகொடு உபாயங்களுக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட ஜீவனோபாய செயற்பாடுகளை மாத்திரம் மேற்கொள்ள முடியும். இங்குதான் அபிவிருத்தி நிறுவனங்களுக்கு ஒரு பிரதான சவாலுள்ளது. மக்களுடைய ஈடுகொடு உபாயங்களுக்கு ஆதரவு கொடுக்கும் நிறுவன ஏற்பாடுகளை எவ்விதம் மேம்படுத்துவது? மற்றும் மக்கள் தங்களுடைய ஜீவனோபாய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அவசியமான நிறுவனங்களின் சேவைகளை பெறுதலை எவ்வாறு மேம்படுத்தலாம்?

ஒருவருக்கோ அல்லது ஒரு சமூக குழுவுக்கோ ஆளுமையை வழங்குவது அந்த ஆளுமை வழங்க இருக்கும் சூழலில்தான் தங்கியிருப்பதால் அதிகாரம் வழங்கல் ஆற்றலை கட்டி எழுப்புவதையும் விட அப்பால் செல்லுகிறது என Bigdon & Korf அழுத்திக் கூறுகின்றனா. ஜீவனோபாய முறையினது உண்மை நிலையில் தனிநபர் ஒருவர் தமது ஜீவனோபாய செயற்பாடுகளை தொடர தேவையான திறமையும் சக்தியுமென ஆளுமையை வழங்கலிற்கு வரைவிலக்கணம் கூறலாம். எவ்வாறாயினும், இது, நிறுவன ஏற்பாடுகளிலும் நிர்வாகமுறை கட்டமைப்பிலும் (கட்டமைப்புகளும் நடைமுறைகளும்) அத்தோடு இலகுவில் பாதிப்புறும் சூழலநிலையிலும் வெகுவாக தங்கியுள்ளது.

இலகுவில் பாதிப்புறும் சூழநிலையின் மீது எந்தளவிற்கு அபிவிருத்தி நிறுவனங்கள் செல்வாக்கு செலுத்த முடிகின்றன? சமூக அபிவிருத்தியில் சம்பந்தப்பட்டிருக்கும் நிறுவனங்களால் இலவில் பாதிப்புறும் சூழ்நிலையில் அளவு மீது தாக்கம் ஏற்படுத்துவது என்பது இயலாத காரியம். இலங்கையில் மோதலில் ஈடுபட்டுள்ள இரு பகுதியினருக்குமிடயில் பேச்சுவாத்தை மூலம் ஒரு தீர்வை உண்டாக்குவதற்கு நிறுவனங்களுக்கு அதிகாரங்களோ சந்தாப்பங்களோ கிடையாது.. அத்தோடு பொருளாதாரப் பூகோளமயமாக்கலின் தாக்கங்கள் வெளிவாரியாக சுமத்தப்பட்டுள்ளதுடன் இவைகளின் தாக்கங்களைக் குறைப்பது முடியாததாகும். என்றாலும் நன்கொடையாளர்கள் சிறப்பான முறையில் இணைந்து செயற்பட்டு, எதிர்த்துக் கொண்டிருக்கும் ஆளணியினரின் முன் நிபந்தனையுடனான உதவியை முன்வைத்தால் பெருமட்ட அளவில் சில நிர்வாகமுறை கட்டமைப்புகளின்மீது சிறப்பாக செல்வாக்கு செலுத்த முடியும். கடந்த காலங்களில், வறுமை ஒழிப்பு, கிராம அபிவிருத்தி ஆகியவற்றிற்கான திட்டங்களுடைய தாக்கத்தை மட்டுப்படுத்தியது நுண்மட்ட - பெருமட்ட தொடர்புகள் அற்றிருந்த காரணத்தினாலேயாகும்.

நடத்தை முறைகளை வழிநடத்திச் செல்வது கடினமாதலால் நிறுவனங்களாலும் வெளிவாரி ஆளணியினராலும் ஈடுகொடு உபாயங்களின் மீது செல்வாக்கு செலுத்தமுடியுமே தவிர அவைகள் மீது மாற்றங்களை திணிக்க முடியாது. ஆகவே முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட உபாயங்களைத் திணிப்பதற்கு நிறுவனங்கள் முயற்சிக்கக் கூடாது., மாறாக நிலைத்திருக்கக்கூடிய பொருளாதார அபிவிருத்திக்கு சாதகமாயிருக்கக்கூடிய சில குறிப்பிட்ட நடத்தைகளை உற்சாகப்படுத்தும் விதமாக சில "ஊக்கங்களை" உருவாக்க வேண்டும். நாம் இனங்காணப்பட்ட ஈடுகொடு உபாயங்களை எடுத்துப் பார்த்தால் அபிவிருத்தி நடைமுறைகளுக்கும் உள்ளூரிலேயே காணப்படும் ஆற்றல்களுக்கும் ஆதரவு வழங்குவதற்கு "ஊக்கங்களை" உருவாக்குவதற்கு IFSP மற்றும் பங்காளி நிறுவனங்களுக்கு எவ்வகையான தத்துவங்கள் அவசியமென நாம் தீமானிக்கலாம். கீழே தரப்பட்டுள்ள "IFSP, பங்காளிகள் ஆகியோருக்கான விளைவுகள்" (implications) அட்டவணை ஈடுகொடு உபாயங்களின் மூன்று தூண்களையும் கவனத்தில் எடுத்து ஜீவனோபாய முறையில் நிலைத்து இருக்கக்கூடிய தலையீடுகளைப் பெறுவதற்குரிய தத்துவங்களை ஆராய்கிறது:

## IFSP, பங்காளிகளுக்கு ஏற்படும் விளைவுகள்

| உயிராபத்து ஏற்படும் சந்தர்ப்பங்களை சமாளித்தல் | குடும்ப பொருளாதாரத்தை நிர்வகித்தல் | வெளிவாரி ஆதரவைப் பெறல் |
|---|---|---|
| . பிரதேசத்தை ஸ்திரப்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குகிறாரா? | • *ஊக்கங்களை* உருவாக்குவதில் மும்முனை அணுகுமுறை (நிவாரணங்கள் தவிர்ந்த):<br>– முதன்மை ஆஸ்திகளை கட்டியெழுப்பல்<br>– கட்டமைப்புகளில் இருந்தும் செயல்முறைகளில் இருந்தும் கட்டுப்பாடுகளை அகற்றல் (இடா↓)<br>– தொழில் ஆரம்பிக்க ஆதரவு வழங்கல் | • சமூக வலைப் பின்னல்களை கட்டியெழுப்பல்<br>• வேளிப்படையான சமூக நிறுவனங்களுக்கு உற்சாகமூட்டல்<br>• நிறுவனங்களில் நம்பகத் தன்மையையும் பொறுப்புணர்ச்சியையும் பேணுமாறு வற்புறுத்தல்<br>• கிராம பொருளாதாரத்துடன் பொருளாதார நிறுவனங்களை இணைத்தல் |

CATAD

IFSP

(i) *தமக்கு உயிராபத்து ஏற்படுவதை சமாளித்தல்:* பாதுகாப்பு நிலைமையை சீர்படுத்துவதற்கு அபிவிருத்தி நிறுவனங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவே வாய்ப்புகளுள்ளன (மு.கொ. Bauer & Korf 2000). எவ்வாறாயினும், ஒரு பிரதேசத்தில் காணப்படும் நிறுவனங்களினது பிரசன்னமும் செயற்பாடுகளும் அங்கு ஒரு ஸ்திரமான நிலையை ஏற்படுத்த பங்களிப்பு செலுத்த முடியும். என்றாலும் மக்களால் நிலைமையைப் புரிந்து கொள்ளும் ஆற்றலே அவர்களுடைய நடத்தையை தீர்மானிக்கிறது. சர்வதேச நிறுவனங்கள் ஒரு பிரதேசத்தில் பிரசன்னமாக இருந்தாலும் மக்கள் தமக்கு பாதுகாப்பில்லை என உணர்ந்தால் அந்தப் பகுதியை விட்டு அவர்கள் வெளியேறி விடுவார்கள்.

(ii) *குடும்ப பொருளாதாரத்தை நிர்வகித்தல்:* அபிவிருத்தியை மையமாகக் கொண்ட தலையீடுகள் நிவாரணத்தை மையமாகக் கொண்ட தலையீடுகளின் மீது மேலாண்மை செலுத்த வேண்டுமென்று IFSP அழுத்திக் கூறுகிறது. நானாவிதமான மட்டங்களிலுமுள்ள ஜீவனோபாய முறைகளின் நடவடிக்கைகளை ஒன்று படுத்தக்கூடிய ஊக்கங்களை உருவாக்குவதற்கு நாங்கள் ஒரு மும்முனை அணுகுமுறையை சிபாரிசு செய்கிறோம்: முதன்மை ஆஸ்திகளைப் பலப்படுத்துவது (மக்களின் ஆற்றல்கள்) கட்டமைப்புகள், நடைமுறைகள் ஆகிய மட்டங்களில் இருந்து இடைஞ்சல் ஏற்படுத்தும் காரணிகளை அகற்றுவதுடன் எப்பொழுதும் ஒன்றுபடுத்தப்படல் வேண்டும். அநேக தருணங்களில், நிறுவனங்கள், குடும்பங்களுக்கு அல்லது சமூகங்களுக்கு உதவி அல்லது சேவைகளை வழங்குகின்றன. ஆனால் இலக்கு குழுக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளையும் முதலீடுகளையும் அவர்கள் பாவனைப்படுத்தப்படுவதை கடினப்படுத்தக்கூடிய நிறுவன ஏற்பாடுகளை அவைகள் கவனத்தில் எடுப்பதில்லை. மேலும் கிராம பொருளாதாரத்தில் உறுதியானதும் முன்னேற்றமானதுமான நடைமுறைகளை மீளளிப்பதற்காக உள்ளூர் மட்டத்தில் தொழில்களை உருவாக்கக்கூடிய ஆளணியினருக்கு ஆதரவு வழங்குவது அவசியமாகிறது. ஆகையால் IFSPயினதும் பங்காளிகளினதும் ஆதரவு இரண்டு குழுவினருக்கும் வழங்கப்பட வேண்டும்: இலகுவில் பாதிப்புறத்தக்க குடும்பங்கள், தொழில்களை உருவாக்க முயன்று கொண்டிருப்போர்.

(iii) *வெளிவாரி ஆதரவைப் பெறல்:* நிறுவன அபிவிருத்தியும் ஆற்றலைக் கட்டி எழுப்புவதும் நான்கு இசைவான மட்டங்களை கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு

சமூகத்தில் வாழும் மக்களுடைய நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதற்கும் சமூக ஆஸ்தியை நிறுவுவதற்கும் சமூக வலைப் பின்னல்களை (அயலவர்களின் ஆதரவு) உரமூட்டுவது மற்றும் வெளிப்படையானதும் நம்பகத் தன்மையுடையதுமான சமூக நிறுவனங்களை உற்சாகப்படுத்துவது ஆகியவை முக்கியமான படிகளாகும். நிறுவனங்களை நம்பகத்தன்மையையும் பொறுப்புணர்ச்சியையும் பேணுமாறு வற்புறுத்துவது IFSP யிற்கு ஒரு சவால் மிக்க பணியாகும்: சகல சம்பந்தப்பட்டவர்களுக்கும் (stakeholders) வெளிப்படையாகவும் புரிந்துகொள்ளக் கூடியதுமான முறையில் நடவடிக்கை எடுக்குமாறு தனது பங்காளி நிறுவனங்களையும் அற்றைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களையும் ஏனைய IFSP வற்புறுத்த வேண்டும். நல்ல முறையான ஆட்சி, தமது அரசநிறுவனங்கள் மீது மக்கள் வைக்கும் நம்பிக்கை ஆகியன திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூவினங்களும் சமாதானமாக வாழ்வதற்கு தேவையான முன் நிபந்தனைகளாகும். மேலும் பொருளாதார நிறுவனங்களை (உ+ம் வங்கிகள்) கிராம பொருளாதாரத்துடன் இணைத்தல் அத்தியாவசியமாகும். யுத்தத்தின் காரணமாக இந்த தொடர்பு மேலும் பலவீனமாகியுள்ளது. கிராம பொருளாதாரத்தில் தம்மை சம்பந்தப்படுத்துவதற்கு இவர்கள் இன்னும் கூடுதலாக பொருளாதார துணிவை எடுப்பதற்கு IFSP போன்ற நிறுவனங்கள் இம்மாதிரியான ஆளணியினருக்கு ஆதரவை வழங்கி உற்சாகப்படுத்தலாம்.

மேற்குறிக்கப்பட்ட விளைவுகள், IFSPயினதும் பங்காளிகளினதும் நானாவித செயற்திட்டங்கள், திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றுடன் வேண்டுமென்றே குறிப்பான முறையில் செயற்படுவதில்லை. செயற்திட்ட கொள்கைகள், தலையீடுகள், மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை திட்டமிடுதலுக்கு அல்லது மீள சரிப்படுத்லுக்கு அத்தியாவசியமான அடிப்படைக் கொள்கைகளை விளைவுகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இந்த அடிப்படைக் கொள்கைகள் தமது சொந்த வேலைகளுக்கும் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் எவற்றைக் குறிக்கின்றன என்பதைப் பற்றி IFSP – CATAD குழு சமூக உணர்வூட்டுநர்கள், IFSP பொறியியலாளர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட IFSP பங்காளிகளுடனும் மிக ஆழமாக கலந்துரையாடியுள்ளனர். இப்போது அவர்களது சொந்த செயற்திட்ட கொள்கைகளுக்கும் தலையீடுகளுக்கும் முடிவுகளை எடுப்பது IFSP நிர்வாகம், ஊழியர்கள் மற்றும் பங்காளிகளினுடைய வேலையாகும். செயற்திட்ட தலையீடுகளைப் பகுத்தாய்வதற்கு பயன்படும் ஒரு உத்தியாக ஜீவனோபாய முறை அணுகுமுறை இருக்கும் அதேநேரம் இந்த ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் ஒரு முகம் பாக்கும் கண்ணாடியில் பொருட்கள் துலக்கமாக தெரிவதுபோல் விளங்கிக் கொள்ளப்பட்டு கண்டுபிடிப்புகள் திருகோணமலையின் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள நானாவித ஆளணியினருக்கும் பின்னூட்டப்பட வேண்டும்..

## தொடர்புடையோர் சம்பாஷணையில் வெளிவந்த கலந்துரையாடல் குறிப்புகள்:

IFSP–CATAD செயற்திட்டம் 2001 ஒரு ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய ஒரு ஆய்வாகும். இந்த குழு, அதனுடைய ஆய்வு காலம் முழுதும் தீவிர தொடர்புடையோர் சம்பாஷணையில் ஈடுபட்டு தொடர்புடையோருக்கும் வள ஆளணியினருக்கும் ஆரம்ப கண்டுபிடிப்புகளை சமாப்பித்துள்ளது (மு.கொ.Korf 2001a: Korf 2001b). திருகோணமலை, பேராதனை, கொழும்பு ஜேர்மனி நாட்டு ஹம்போல்ட் பல்கலைக்கழகம் போளின் ஆகிய இடங்களில் இறுதிப் பெறுபேறுகள் சமர்ப்பிக்கப்பட்ட நேரத்தில் நடைபெற்ற இறுதிக் கட்ட தொடர்புடையோர் சம்பாஷணையின் போது விவாதிக்கப்பட்ட முக்கிய விடயங்களை நாம் இப்போது எடுத்துக் கூறுவோம். கீழே தரப்பட்ட சிந்தனைகள் மேலும் ஆய்வுக்கு உட்படுத்துவதற்கான பிரதான விடயங்கள், தற்போதுள்ள ஆய்வு அணுகுமுறையிலுள்ள பலம், வரையறைகள் ஆகியவற்றை சுட்டிக்காட்டி சிக்கலான அவசரகால நிலைமைகளில் ஈடுகொடு உபாயங்கள் என்ற ஆய்வுக்குரிய விடயத்துடன் தொடர்புடைய எண்ணக் கருவானதும் வாய்முறையானதுமான சிந்தனைகளையும் பெறுகின்றன.

*(1) வறுமை நிலைக்கு அல்லது யுத்தத்திற்கு ஈடுகொடுத்தல் - இவை வேறுபட்டனவா?*

மோதல், வறுமையை முக்கியமானதொன்றாகக் காட்டி இவ்வாறாக ஈடுகொடு உபாயங்களை முக்கியமானதாக காட்டுகிறதா? முத்தூண் மாதிரியில் எடுத்துக் கூறப்பட்ட ஈடுகொடு உபாயங்களில் பலவற்றை வறுமை நிலைக்கு ஈடு கொடுப்பதோடும் தொடர்புபடுத்த முடியும். குறிப்பாக யுத்தநிலைமைகளில் தாக்குப் பிடிப்பதற்கான மக்களின் ஈடுகொடு உபாயங்கள்

யாவை? வேறு வார்த்தைகளில் கூறுவதானால் யுத்தநிலைமைகளிலுள்ள பிரதேசங்களில் வாழும் வறிய கிராமத்தவர்களுடைய நடத்தைகளுக்கும் யுத்தநிலைமைகளற்ற பிரதேசங்களில் வாழும் வறிய கிராமத்தவர்களின் நடத்தைகளுக்கும் இடையில் வேறுபாடுகள் ஏதும் உண்டா? ஜீவனோபாயத்தின் வேறுபட்ட மூலங்களின் மீது "தனி ஒன்றின் மீதல்ல" பலதரப்பட்ட காரணிகளும் தாக்கங்களும் ஒன்றின்மீது ஒன்று கொண்டுள்ள தாக்கங்களின் விளைவுதான் ஈடுகொடு உபாயங்கள் என்பதை ஜீவனோபாய அணுகு முறை கோடிட்டுக் காட்டுகிறது. ஆகவே வறுமையையும் யுத்தநிலைமையை எதிர்கொள்வதையும் கண்டிப்பான முறையில் வேறுபடுத்துவது கடினம் என்றாலும் எமது "மாதிரி"யில் உள்ள முதலாவது தூண் "தமக்கு ஏற்படும் உயிராபத்தை சமாளித்தல் - யுத்தநிலைமையோடும், அது தொடர்பாக உயர்ந்துள்ள தனிப்பட்ட இடரோடும் தொடர்பாயுள்ளது தெளிவாக புலனாகின்றது. இதைவிட நிச்சயமற்ற நிலை, பாதுகாப்பற்ற நிலை என்பனவும் முதலீடுகள் செய்வதை பாதிக்கும் பொருளாதார இடர்களை மேலும் மோசமடையச் செய்கின்றன அத்துடன் இந்தக் காரணி, இரண்டாவது மூன்றாவது தூண்களிலுள்ள நானாவித ஈடுகொடு உபாயங்களில் காட்டப்பட்டுள்ளன. இம்முறையில், பொருளாதார இடர் அதிகரிப்பது பெருமட்ட பொருளாதார நிலைமைகளாலும் ஏற்படக்கூடும். உ+ம் தேசிய திறந்த சந்தைக்கொள்கைகள். இவ்வாறாக உருவாக்கப்பட்ட இடர்களுக்கு முகம் கொடுத்தல் பாதுகாப்பு நிலைமையால் உருவாக்கப்பட்ட பொருளாதார இடர்களுக்கு முகம் கொடுத்தலை ஒத்ததாக இருக்கலாம்.

யுத்தத்திற்கு முன்பிருந்த நிலைமையோடு ஒப்பிடும் போது வறுமை மேலோங்கியுள்ளதா இல்லையா என்பதை ஒரு ஒப்பிடு பகுத்தாய்வு மூலம் தெளிவுபடுத்த முடியலாம் என்று அவதானிக்கப்பட்டது. யுத்த வலயங்களில் உள்ள கிராமப் பகுதிகளிலும் பார்க்க அமைதிச் சூழலில் இருக்கும் சில கிராமப் பகுதிகளில் வறுமை நிலை மேலோங்கியிருக்கிறது என்று இலங்கை அரசாங்கத்திற்கு அளித்த ஒரு இரகசிய அறிக்கையில் உலக வங்கி கூறியுள்ளது. சமூக - பொருளாதார நிலைமைகளின் மீது மோதல் ஏற்படுத்திய தாக்கம் அநேகமான அறிக்கைகளில் மிகைப்படுத்தப்பட்டுள்ளது எனவும் இரண்டாவதாக அரச சகாயமும் நிவாரணமும் மக்கள் பாரிய அளவில் வறுமை நிலைக்கு தள்ளப்படுவதை தடுக்க முடியும் எனவும் முடிவிற்கு வந்தனர். என்றாலும் இந்த வாதம் கடுமையான கேள்விக்கு இலக்காகிறது ஏனெனில் இது தற்போதைய சூழ்நிலைகளை அதனுடைய முந்தைய சூழலில் வைத்துப் பார்க்கவில்லை - அதாவது யுத்தத்திற்கு முந்தைய நிலைமையோடு ஒப்பிடல்.

சிக்கலான அவசரகால நிலைமைகளிலுள்ள கிராமங்களினதும் அமைதிச் சூழலிலுள்ள கிராமங்களினதும் ஈடுகொடு உபாயங்களுக்கிடையிலான வேறுபாடுகளை தீர்மானிப்பதில் அந்த இடங்களிலே வளங்களைப் பெற்றுக் கொள்வதும் அவற்றிற்கு முன்னுரிமை கோரலும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. யுத்த வலயங்களில் நிலவும் பாதுகாப்பு நிலைமைகளால் வளங்களை மிகக் குறைந்த அளவிலேயே பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதால் அங்கு எவற்றையும் தெரிவு செய்வதற்கான சுதந்திரம் மிகக் கடுமையான முறையில் தடை செய்யப்பட்டுள்ளது என வாதிடப்பட்டது. மேலும் பல இனங்கள் வாழும் திருகோணமலை சூழலில் இருக்கும் அடிப்படை சச்சரவு யாதெனில் எந்த சமூகம் (இனம்) வளங்களையும் உதவிகளையும் சிறந்த முறையில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதாகும். மேலும் ஆய்வுக்குரிய ஒரு பிரதான கேள்வி யாதெனில் இந்த சச்சரவு, யுத்தத்திற்கு முன்பு நிலவிய, சமூகங்களிற்கு இடையிலான பரிமாற்றங்கள் மீதும் ஒருவரில் ஒருவர் தங்கியிருந்த நிலைமைகளின் மீதும் செல்வாக்கு செலுத்தியிருக்க முடியுமா, இல்லையா என்றும் செல்வாக்கு செலுத்தியிருந்தால் எவ்வாறு செலுத்தியிருக்கக் கூடும் என்பதாகும்.

*(2) ஜீவனோபாயங்களுக்குள் சமூக வேறுபாடுகள்:*

பாதிப்புறத்தக்க குடும்பங்களும் தனிநபர்களும் எவ்வாறு ஈடுகொடுக்கிறார்கள்? கொள்கைகளில் சரிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காகவும் நடைமுறையில் இருக்கும் செயற்திட்ட அமுலாக்கல் முறைகளில் உள்ள குறைகளை வெளிப்படுத்தவும் IFSP-CATAD செயற்திட்டம் மக்களுடைய ஈடுகொடு உபாயங்களிலுள்ள பொதுவான முறைகளை ஆராய்ந்தது. மேலதிக ஆய்வுகள் சமூகங்களுக்குள்ளேயும் குடும்பங்களுக்குள்ளேயும் உள்ள வேறுபாடுகளை தீர்மானிக்கும்: யுத்தத்தினுடைய தாக்கம் பிரதேசங்கள் இடையே, சமூகங்கள் இடையே, குடும்பங்களிடையே, தனிநபர்கள் மீது வித்தியாசமானதாக இருக்கும் (குடும்பங்களிடையே பகிர்ந்தளிக்கப்படும் வளங்கள்). எவை மற்றவைகளை விட மேலும் அதிகம் பாதிக்கப்படுகின்றன? ஒரு பிரதான கேள்வி மிகுந்திருக்கிறது: சமூகங்களுக்குள்ளே எந்த முதன்மை ஆஸ்திகள் பாதிப்புறக்கூடிய குழுக்களுக்கு உள்ளன / கிடைக்கின்றன? எவ்வாறாயினும் ஈடுகொடுத்தலின் வேறுபாடுகளை விளங்கிக் கொள்வதற்கு குடும்ப

ஆஸ்திகளின் மீது கவனத்தை செலுத்துதல் மாத்திரம் போதுமானதல்ல, ஏனெனில் ஜீவனோபாய செயற்பாடுகளையும் உபாயங்களையும் தீர்மானிக்கும் பிரதான தடைக் காரணிகள் அநேகமாக கட்டமைப்புகளினதும் செயன்முறைகளினதும் மட்டத்திலேயே உள்ளன.

*(3) சமூக, கலாச்சார முதல்களின் மறுமலர்ச்சியா? அல்லது வீழ்ச்சியா?*

வறுமை, மோதல் ஆகிய சூழல்களில் மனித நடத்தை பற்றிய விளக்கத்தை பெற்றுக் கொள்ள, இலங்கையிலும், தென் கொரியாவிலும் நடந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்ற ஆய்வின் மூலம் கிடைத்த கண்டுபிடிப்புகளால் மேலும் ஒரு விளக்க அனுமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். சிக்கலான அவசர நிலைமைகளில் ஜீவனேபாயங்களை மேற்கொள்வதற்கு சர்ச்சைக்குரிய இரண்டு பிரதான விடயங்கள் சம்பந்தப்படுகின்றன.

- ✓ சமூக (சமூக எதிர்) முதல் எண்ணக் கரு:[9] மிக அதிகமாக விவாதிக்கப்பட்ட கருப்பொருள் சமூக முதலின் மீது மோதலினது தாக்கம் ஆகும், அபிவிருத்தியை தீர்மானிக்கும் பிரதான காரணிகளாக குடிசார் கடமைகளின் வலைப்பின்னல்கள் உள்ளன என்று சமூக முதல் எண்ணக்கரு வாதிடுகிறது (Putnam 1993). ஜீவனோபாய உபாயங்களை மேற்கொள்வதற்கு சமூக ஆஸ்திகள், அதாவது குடும்பங்களினுள்ளேயும் குடும்பங்களிடையேயும் உறவினர்களிடையேயும் சமூகங்களிடையேயும் பரஸ்பர நம்பிக்கை, ஒத்துழைப்பு ஆகியன மிகவும் முக்கியமான மூலங்களாகும். நீடித்துக் கொண்டிருக்கும் மோதல் சமூக முதலை பலவீனப்படுத்தவோ அதற்கு மேலாக அதை முற்றாக நிர்மூலமாக்கவோ முடியும்: சச்சரவு ஏற்படுத்தும் தொழில் நிர்வாகிகள் தமது பலாத்கார நடவடிக்கைகளைப் பயன்படுத்தி குடிசார் கடமைகளை நடைபெறாமல் தடை செய்யலாம். யுத்தத்தை தொடரச் செய்வதும் பிரிவினையை ஊக்குவிப்பதுமான இந்தவகையான வலைப்பின்னல்களையும் உடன்படிக்கைகளையும் குறிப்பிடுவதற்கு "சமூக-எதிர்" முதல் என்னும் பதத்தை Good hand & Hulme – 1999 பாவிக்கின்றனர். சமூக முதலை படிப்படியாக கட்டியெழுப்பும் நடைமுறை ஒரு நீண்டகால நடைமுறையாக இருக்கும் அதேவேளை சமூக-எதிர் முதல் ஒப்பீட்டளவில் விரைவாக நிறுவப்படலாம் என அவர்கள் கருதுகிறார்கள்.

  மட்டக்களப்பில்[10] தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆய்விலிருந்து, அங்குள்ளவர்களால் நிறுவனங்களிடமிருந்து உதவிகள் கோருவதற்கு அவசியமான அமைப்புகளும் நிறுவன ஏற்பாடுகளும் அவர்களிடம் மிகக் குறைவாக உள்ளதென புலனாகியது. ஆகவே குடும்ப ஆஸ்திகள் இல்லாதவிடத்து அல்லது குறைந்து போய்க் கொண்டிருக்குமிடத்து ஒரு அடிப்படை சமூக பாதுகாப்பை பெற்றுக் கொள்வதற்கு சமூக வலைப் பின்னல் அமைத்தல் அத்தியாவசியமாகிறது. ஆசியாவில் நடத்தப்பட்ட தன்னுடைய மனிதவர்க்க சாஸ்திர ஆராய்ச்சியில் (anthropology) Clifford Geertz "பகிரப்பட்ட வறுமை" என்னும் ஒரு போக்கை அவதானித்தார். இதில் பொருளாதார வீழ்ச்சியின் போது அல்லது பொருளாதார அழுத்தத்தின் போது மக்கள் பொருளாதார முதலீடுகளிலிருந்து விலகி சமூக முதலீடுகளை நோக்கி நகருகிறார்கள். எவ்வாறாயினும் பரம்பல் குடும்பத்தின் (extended family) தேவைகளும் கோரல்களும் குடும்பங்களுடைய குடும்ப ஆஸ்திகளின் மீது அளவுக்கு மீறிய சுமையை ஏற்படுத்தக்கூடும். இதனால் தனிநபர்கள் தமது குடும்பங்களுடைய கோரல்களை சுருக்குவதற்கு உபாயங்களை தேடக்கூடும். பொருளாதார உண்மை நிலையை மறைத்தல் மற்றும் தமது சொத்துக்களை சிறிதாக்கல் ஆகிய உபாயங்களுக்கும் இது விளக்கமளிக்கக் கூடும். இது எமது ஆய்வு காலத்தின்போது நடத்திய நேர்காணல்களின் போது ஒரு உபாயமாக பயன்படுத்தப்பட்டதை நாம் சாதாரணமாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

---

[9] இணைக்கப்பட்ட செயல்கள் தேவைப்படும் நானாவிதமான ஜீவனோபாய உபாயங்களை பின்பற்றும்போது மக்கள் தெரிந்தெடுத்துக் கொள்ளும் சமூக வளங்களை (வலைப்பின்னல்கள், சமூக கோரல்கள், சமூக உறவுகள், இணைப்புக்கள், சங்கங்கள்) Scoones (1998) வரைவிலக்கணப்படுத்துகிறார்.

[10] இந்த ஆய்வு Heidelberg கலாசாலையின் புவிவியியல் பீட தெற்காசிய நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் Dr. Hans-Geog Bohle என்பவரால் மட்டக்களப்பு கிழங்கிலங்கை பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டது.

சமய-கலாச்சார முதல் வகிக்கும் பாத்திரம்: சமயத் தலைவர்கள் வகிக்கக்கூடிய பாத்திரங்ளைப்பற்றி தாக்கரீதியாக விவாதிக்கப்பட்டது. IFSP–CATAD செயற்திட்ட ஆய்வினுடைய கண்டுபிடிப்புகள் இனங்களுக்கிடையே ஒரு மாறுபட்ட நிலையை எடுத்துக் காட்டின : முஸ்லிம், பௌத்த சமூகங்களில் வட்டம் கிராமத்து மசூதி சமூகமும் கல்யாணபுர கிராம பௌத்த துறவியும் கிராம வாழ்வில் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறார்கள். மேலும் இவர்கள், சமூகத்திற்கும் வெளிவாரி ஆதரவு அளிக்கும் அமைப்புகளுக்கும் இடையே செயற்படும் ஒரு இடைப்பட்ட நிறுவனமாக அடிக்கடி செயற்படுகின்றனர். மேலும் அவர்கள் பிறருக்காக பரிந்து பேசி பிரச்சனைகள் எழும் சந்தர்ப்பங்களில் அவற்றைத் தீர்ப்பதற்கு நீதிமான்களாகவும் இயங்குகின்றனர். இதற்கு வித்தியாசமாக, தமிழ் சமூகங்களில் ஒரு இந்து குரு வகிக்கும் பாத்திரம் மிகவும் குறைவாகவே வெளியுலகிற்குக் காட்டப்படுகிறது. மேலும் பல சந்தர்ப்பங்களை எடுத்துப் பார்க்குமிடத்து இந்துக் குரு மற்றவர்களைவிட பாதிப்புறக் கூடியவராக இருப்பதால் அவர் தன்னை குறைவாகவே வெளிப்படுத்திக் கொள்கிறார். இந்து சமயத் தலைவர்களை விட பௌத்தம், இஸ்லாம் ஆகிய சமயத் தலைவர்கள் சமூக வாழ்விலே மேலும் கவர்ச்சிகரமான பாத்திரத்தை வகிக்கிறார்கள் என்றாலும் வறுமை பகுத்தாய்வு மத்திய நிலையம் (CEPA) அண்மையில் திருகோணமலையில் நடத்திய ஆய்வின்படி திருகோணமலையைச் சேர்ந்த மூன்று சமய தொழில் நிர்வாகிகளுக்கும் சமயம் ஒரு இன்றியமையாத பாத்திரத்தை வகிக்கிறது. (மு.கொ. Weeratunga 2001). மக்கள் சமயத்தில் முதலீடு செய்வதுண்டா?

ஒரு பிரதான கருதுகோள் அல்லது முடிவு யாதெனில் யுத்த நிலைமைகள் மக்களுடைய இன அடையாளத்திற்கு சவாலாக இருக்கிறது. உயர்ந்து வரும் சமூக, கலாச்சார முதலின் முக்கியத்துவம் மக்களுடைய இன அடையாளத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான வழிகள் என விளங்கிக் கொள்ளலாம். சமய நிறுவனங்களிலும் சமய சின்னங்களிலும் (கோவில்கள்) முதலிடுவது சமூக மட்டத்தில் மற்றைய நிறுவன ஒழுங்கு முறைகளை பலப்படுத்த பங்களிப்பு செய்யக்கூடும். அதிகாரத்தை தம்வசம் வைத்திருப்பவர்கள் மீது கிராமத்தினர் எவ்வாறு அழுத்தத்தைப் பிரயோகித்து தமக்கு சாதகமானவாறு யாவற்றையும் நடத்துவது என்பவற்றை தீர்மானிப்பவர்களாக இருப்பதன் மூலம் சமயத் தலைவர்கள் சமூகங்களுடைய அரசியல் முதலிற்கு மிகவும் இன்றியமையாதவர்கள் என்பதையும் எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மறுபக்கத்தே, கிராமத்தின் தலைவர்களாக வரக்கூடியவர்கள் ஒன்றில் அப்பிரதேசத்தை விட்டு அகன்றிருப்பதையும் அல்லது அவர்கள் தம்மை வெளிப்படுத்தாமல் இருப்பதையும் அல்லது மறைந்திருப்பதையும் IFSP–CATAD ஆய்வு குழுவினர் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்தப் போக்கின் மூலம் கிராமத்துக்கு ஒரு தலைமைத்துவம் கிடைக்கும் வாய்ப்பு அற்றுப் போகிறது. ஒருவர் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளல் அவருக்கு இடரை உண்டு பண்ணும்[11] : “எவரும் ஒரு கதாநாயகனாக வர விரும்பவில்லை” ஏனெனில் இது அவரின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியது.

*(4) உத்தியாகவும் எண்ணக்கருவாகவும் ஜீவனோபாய முறை அணுகுமுறை (LSA)*

குடும்பத்தின் உணவு, போஷாக்குப் பாதுகாப்பை நிர்ணயிப்பதற்கு உணவு மாத்திரம் தனியாகப் போதுமானதல்ல. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் நடத்தையை நிர்ணயிக்கும் நானாவித காரணிகளை புரிந்து கொள்ள ஜீவனோபாய அணுகுமுறை (LSA) ஒரு மேலும் பின்னிப் பிணைந்த உருவமைப்பை (framework) வழங்குகிறது. அதாவது ஈடுகொடு உபாயங்களும் விளைவுகளும், அதாவது உணவு, போஷாக்குப் பாதுகாப்பு இருக்கும் மட்டங்கள் அனுபவ வாயிலான ஆய்விற்கான ஒரு உருவமைப்பாக LSA யை IFSP – CATAD செயற்திட்டம் பயன்படுத்தியது. மேலதிகமாக IFSP யிற்கும் பங்காளி நிறுவனங்களிற்கும் ஒரு திட்டமிடல் உத்தியாகவும் IFSP – CATAD செயற்திட்டம் LSA ஐ அறிமுகப்படுத்தியது :

- ✓ எவருக்கு *LSA* ஒரு உத்தியாக உள்ளது *?* IFSP யால் ஆதரவு வழங்கப்படும் சமூக உணர்வூட்டலுக்கு தற்போது நுழைவாயிலாக இருக்கும் பங்குபற்றுவோர் தேவைகள் மதிப்பீட்டிற்கு (PNA) மேலும் மெருகூட்டுவதற்கு ஒரு மேலதிக திட்டமிடும் உத்தியாக LSA யை பயன்படுத்த சிபாரிசு செய்யப்பட்டது. PNA இல் கிராமத்தவர்களிடமிருந்து பெறப்படும் உட்தோற்றங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படும் அதே வேளை ஒரு

[11] Cf. Goodhand & Lewer 1999 மட்டக்களப்பிலும் இதே மாதிரியான முடிவுகள்.

சமூகத்தின் உள்ளிருந்து அதை மாற்றமடைய வைக்கும் சக்திகளின் மேலும் ஒரு சிக்கலான தோற்றத்தை பெற்றுக் கொள்வதற்கு, திட்டமிடுபவர்களுக்கும் சமூக உணர்வூட்டுனர்களுக்கும் LSA ஆதரவினை வழங்கலாம் (அதாவது வெளித்தோற்றம்).

✓ *பாரிய அளவு வினாக்கொத்து ஆய்வுமுறைக்கு LSA மாற்றீடாகுமா*? பாரிய அளவிலான வினாக்கொத்து ஆய்வுகள் தொகை-மட்ட தரவினை சேகரிக்கின்றன, என்றாலும் இந்த தரவு சேகரிப்பு (அனேகமான தரவு சேகரிப்பாளரின் தராதரங்களும் தகுதிகளும் கேள்விக்குரியவை) மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளின் நம்பகத்தன்மை சந்தேகத்துக்கிடமானது?

ஜீவனோபாய அணுகுமுறை ஒரு பின்னிப்பிணைந்த உருவமைப்பினை வழங்குகிறது. ஆனால் ஒரு கிராம சமூகத்திற்கு உரித்தான சிக்கலான யதார்த்தங்களையும் அதனுடைய சகல விபரங்களையும் அறிவது கடினமாகும். இந்த செயல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஜீவனோபாய மாதிரியான இத்திக்குளம், விவசாய முறைகள் சம்பந்தமான ஈடுகொடு உபாயங்களில் கவனம் செலுத்தியது. சமூக மற்றும் பொருளாதார வாழ்வின் ஏனைய அனேகமான பகுதிகளில் அது கவனம் செலுத்தவில்லை. ஒரு சமூகத்தினது ஒரு குடும்பத்தினது பரந்த முழுமையான விபரங்களை அறிந்து கொள்ளுவது என்பது கடினமான காரியமாக இருக்கும். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பொருந்தக்கூடிய தகவல்களை அளிக்குமுகமாக IFSP – CATAD செயற்திட்டம் 2001 இனுடைய ஆழமான ஆய்வு எவ்வாறு மேலும் ஆழமாக்கப்பட்டு மெருகூட்டப்படலாம் என்பதற்காகிய சில சிபாரிசுகள் பெட்டி 3இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**பெட்டி 3: ஜீவனேபாய பகுத்தாய்வில் மேலும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடய நிரல்:**

- ✓ ஜீவனோபாய முறை பகுத்தாய்தலில் சண்டை பரிமாணத்தை ஒன்றிணைக்கவும்,
- ✓ ஜீவனோபாய முறையில் சில குறிப்பிட்ட தலையீடுகளின் தாக்கத்தை ஆழமாக பகுத்தாயவும்,
- ✓ காலப் போக்கில் ஈடுகொடு உபாயங்களை மாற்றியமைக்கும் சக்திகளைத் தீர்மானிக்கவும்,
- ✓ வறுமை மட்டங்கள், பெறுபேறுகள் மற்றும் பாதிப்புறுதன்மை மட்டங்கள் ஆகியவற்றை தரப்படுத்துக,
- ✓ PRA உத்திகளைப் பயன்படுத்தி முதன்மை ஆஸ்திகளை தொகை மதிப்பிடுக,
- ✓ ஈடுகொடு உபாயங்களை வெற்றி கொள்ள வைக்கும் காரணிகளை இனங் காண்க (வெற்றி நிகழ்வுகள், சரியான பயன்பாடு),
- ✓ கால சந்தாப்பங்கள்(strategic) சாாந்த நடத்தை ஈடுகொடு உபாயங்களின் மேல் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என கணிப்பிடுக,
- ✓ அதிகாரங்களை தம்வசம் வைத்திருப்பவர்களினதும், மற்றும் அரச அமைப்புகளினுள்ளும் அரச சார்பற்ற அமைப்புகளினுள்ளும் முக்கிய ஆளணியினரதும் ஈடுகொடு உபாயங்களையும், அவர்களுக்குள்ள தனிப்பட்ட ஆர்வங்களையும் மீளாய்வு செய்க. அத்துடன் இவை எவ்வாறு ஜீவனோபாய முறைமை ஏற்பாடுகளான கட்டமைப்புகளிலும் நடைமுறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதை மீளாய்வு செய்க.

## முடிவுரை குறிப்புகள்:

யாவற்றையும் சுருங்கக் கூறினால் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் ஒரு சவால் நிறைந்ததும் நம்பிக்கையூட்டுவதுமான அடிக்கட்டமைப்பினை ஜீவனோபாய அணுகுமுறை அமைக்கிறது. இது ஒரு திண்ணமான, ஒழுங்கு முறையிலான அணுகுமுறையானதும் "ஒரு சிறிய அளவிலான நன்மை" செய்யும் கொள்கையைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவிடுவதற்கு ஒரு காரண கர்த்தாவாக இருக்க முடியும். "ஈடுகொடுத்தல்" அனேகமாக தற்பாதுகாப்பு, எதிர்த்தாக்க நடத்தையுடன் குறிப்பாக சம்பந்தப்படுத்தப்படுகிறது என்றாலும் சகல மக்களும் முழுமையாக பாதிப்புறத் தக்கவர்களாகவும் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட கைவிடப்பட்டவர்களாகவோ இருப்பதில்லை. மாறாக அவாகள் ஒரு குறிப்பான சூழலை ஊக்கத்துடன் ஈடுகொடுத்து அதற்கேற்றபடி நடந்து கொள்கிறார்கள். இருந்த போதிலும் அனேகமான மக்களை, அவர்கள் நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதன் வேகத்தை குறைக்கும் பிரதான அச்சுறுத்தும் காரணி வன்முறை என்பது தெளிவாகிறது.

பங்குபற்றுதலுக்கான திட்டமிடலுக்கு, செயல் நோக்கம் நிறைந்த ஆராய்ச்சி மெருகூட்டுகிறது. நடத்தைகள் (behaviour) போக்குகள் (trends), ஈடுகொடு உபாயங்கள் ஆகியவற்றைப் பற்றிய ஆழமான புரிந்துணர்வை வழங்குவதற்கு காரணமாக இருக்கும் பிரயோக விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிக்கு மாற்றீடாக பங்கேற்பு முறையிலான தேவைகள் மதிப்பீடு (PNA) இருக்க முடியாது. இதன் மறுமாதிரியாக, ஆராய்ச்சி ஒரு நடைமுறையாக, பங்குபற்றுதலுக்கான திட்டமிடுதலுக்கும் சமூக உணர்வூட்டலுக்கும் மாற்றீடாக அமையாது.. மேலும் அடிமட்ட ஆய்வுகளின் பெருமட்ட-நுண்மட்ட விளைவுகளை ஆராய்வதும் மற்றும், நிலத்தை நம்பி வாழும் வறிய நுண்மட்ட சமூகங்களின் மீது பெருமட்ட முடிவுகள் எவ்வாறு தாக்கம் புரிகின்றன என்பதை மதிப்பீடு செய்வதற்கு தேவையான ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளுடன் பெருமட்ட-கொள்கை மட்டத்தில் பிரதான ஆளணியினருடன் விவாதம் புரிவதும் அத்தியாவசியமானவையாகும்.

**REFERENCES:**


Anderson, Mary. 1999. *Do No Harm: How Aid Can Support Peace – or War*. London: Lynne Rienner Publ.

Bauer, Eberhard; Christine Bigdon and Benedikt Korf. 2000. Anspruch und Wirklichkeit in der Konfliktbearbeitung – Was kann Entwicklungszusammenarbeit wirklich leisten? Das Beispiel Sri Lanka'. *Peripherie*, 79, 43-68.

Bigdon, Christine and Benedikt Korf. 2001. 'Empowerment and Community Development as Entry Points for Conflict Transformation?'. In Norbert Ropers et al. eds. *Berghof-Handbook for Conflict Transformation*, www.berghof-center.org/handbook

Bohle, Hans-Georg. 1993. 'The Geography of Vulnerable Food Systems'. In *Coping with vulnerability and criticality,* eds. Bohle, Hans-Georg et al. 15-29. Saarbrücken: Breitenbach Verlag.

Carney, Diana. 1998. *Sustainable Rural Livelihoods. What contribution can we make*. London: Department for International Development (DFID).

Chambers, Robert. 1989. 'Vulnerability, Coping and Policies'. *IDS Bulletin* XX, 2, 1-7.

Chambers, Robert and Gordon Conway. 1992. *Sustainable rural livelihoods. Practical concepts for the 21st century*. IDS Discussion Paper 296. Brighton: Institute for Development Studies.

Dunham, David and Chris Edwards. 1997. *Rural Poverty and Agrarian Crisis in Sri Lanka 1985-95: Making Sense of the Picture*. Poverty and Income Distribution Series No. 1. Colombo: Institute of Policy Studies (IPS).

Devarajah, K.; Benedikt Korf and Christine Schenk. 2001. *Grievances Over Land. Thematic Area Study on Land Use: Menkamam – Dehiwaththa*. Working Paper No. 44. IFSP-CATAD Project. Trincomalee: Integrated Food Security Programme (IFSP).

Dharmarajah, Dharsanie; Tobias Flämig, Benedikt Korf and Christine Schenk. 2001. *Missing the Onion Boom? Kumpurupitty – Village Profile*. Working Paper No. 42. IFSP-CATAD Project. Trincomalee: Integrated Food Security Programme (IFSP).

Flämig, Tobias; Abeyratne Ratnayake and Monika Ziebell. 2001. *Fragile Prosperity on the Fringe of Power. Kalyanapura – Village Profile*. Working Paper No. 41. IFSP-CATAD Project. IFSP-CATAD Project. Trincomalee: Integrated Food Security Programme (IFSP).

Goodhand, Jonathan and Nick Lewer. 1999. Sri Lanka: NGOs and peace-building in complex political emergencies. *Third World Quarterly*, XX, 1, 69-87.

Goodhand, Jonathan and David Hulme. 1999. From wars to complex political emergencies: understanding conflict and peace-building in the new world disorder. *Third World Quarterly*, XX, 1, 13-26.

Korf, Benedikt. 2001a. Assessing Livelihoods in Complex Emergencies. Framework of Analysis. Working Paper No. 38. IFSP-CATAD Project. Trincomalee: Integrated Food Security Programme (IFSP).

Korf, Benedikt. 2001b. Seven Pillars of Coping Strategies in Complex Emergencies. Preliminary Results from Case Studies in Trincomalee District. Working Paper No. 39. IFSP-CATAD Project. Trincomalee: Integrated Food Security Programme (IFSP).

Nagel, Uwe and Karin Fiege. 2001. *Planung und Durchführung actions- und entscheidungsorientierter Untersuchungen (AEU)*. Berlin: Seminar für Ländliche Entwicklung (SLE).

Putnam, Robert. 1993. *Making Democracy Work: Civic Traditions in Modern Italy*. Princeton NJ: Princeton University Press.

Sakthivel, T. and Julia Ziegler. 2001. Squeezed between the Lines. Vaddam – Village Profile. Working Paper No. 43. IFSP-CATAD Project. Trincomalee. Integrated Food Security Programme (IFSP).

Scoones, Ian. 1998. *Sustainable Rural Livelihoods – a Framework of Analysis*. IDS Working Paper 72. Brighton: Institute of Development Studies.

Sen, Amarthya. 1981. *Poverty and Famines. An Essay on Entitlements*. Oxford: Clarendon Press.

Shanmugaratnam, N. 1999. *Rural Poverty in Sri Lanka: A Synthesis of Preliminary Qualitative Studies*. Report to the World Bank. Noragric (Centre for International Environment and Development Studies).

Weeratunge, Nireka. 2001. *Micro-Entrepreneurs and Entrepreneurial Cultures in Sri Lanka: Implications for Poverty Reduction*. Study Report. Colombo: Centre for Poverty Anaylsis (CEPA).

World Bank. 2000. *Sri Lanka: Recapturing Missed Opportunities*. World Bank Country Report. Washington D.C.: World Bank.

Ziebell, Monika and Julia Ziegler. 2001. *Converting Threats into Opportunities? Ithikulam – Village Profile*. Working Paper 40. IFSP-CATAD Project. Trincomalee: Integrated Food Security Programme (IFSP).

## IFSP Working Papers

(Documentation of the ICP 2001)

Working Paper 37
Benedikt Korf and Rohini Singarayer
*Livelihoods in Complex Emergencies. Land Use, Socio-economic Coping Strategies and Food Security in Trincomalee District*
Reconnaissance Mission
Trincomalee, May 2001

Working Paper 38
Benedikt Korf 2001
*Assessing Livelihoods in Complex Emergencies: Framework of Analysis*
Presentation of Research Design
Trincomalee, August 2001

Working Paper 39
Benedikt Korf
*Seven Pillars of Coping Strategies in Complex Emergencies. Preliminary Results from Case Studies in Trincomalee District*
Trincomalee, September 2001

Working Paper 40 ():
Monika Ziebell and Julia Ziegler
*Converting Threats into Opportunities?*
*Ithikulam - Village Profile*
Trincomalee, October 2001

Working Paper 41
Tobias Flämig, Abeyratne Ratnayake and Monika Ziebell
*Fragile Prosperity on the Fringe of Power*
*Kalyanapura – Village Profile*
Trincomalee, October 2001

Working Paper 42
Dharshinie, Dharmarajah; Tobias Flämig, Benedikt Korf and Christine Schenk
*Missing the Onion Boom*
*Kumpurupitty - Village Profile*
Trincomalee, October 2001

Working Paper 43
Sakthivel, T. and Julia Ziegler
*Squeezed between the Lines*
*Vaddam – Village Profile*
Trincomalee, October 2001

Working Paper 44
Devarajah, K.; Benedikt Korf and Christine Schenk
*Grievances over Land*
*Dehiwatte - Menkamam: Thematic Area Study on Land Use*
Trincomalee, October 2001

Working Paper 45
Benedikt Korf
*Livelihoods at Risk*
*Land Use and Coping Strategies of War-affected Communities in the Trincomalee District*
Trincomalee, November 2001